Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 தை 15 ஞாயிற்றுக்கிழமை (29.01.2012) பக்கங்கள் 16 ஓசை – 120

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/1187)













# இலங்கையில் நல்லிணக்கம் ஏற்பட ஐரோப்பிய நாடுகள் உதவ வேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்து

(ஜெனிவா)

போருக்குப் பின்னரான நிலையில் இலங்கையில் நல்லிணக்கத்தையும் புனரமைப்பையும் முன்னெடுத்துச்செல்வதற்கு ஐரோப்பிய நாடுகள் ஆதரவை வழங்கவேண்டும் என ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது தொடர்பாக ஐரோப்பிய நாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஐரோப்பிய ஆணைக் குழுவின் உறுப்பினர்கள் கடந்த 5 ஆம் திகதி ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினரான Van Orden அங்கு கருத்துத் தெரிவிக்கையில், இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொதுவில் உடன்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

அண்மையில் இலங்கைக்குச் சென்று திரும்பிய நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதன்போது (15 ஆம் பக்கம் பார்க்க)



## முன்னாள் புலிகளும் பொலிஸ் சேவையில்


(கொழும்பு)

புனர்வாழ்வளிக்கப்பட்ட புலிகளின் முன்னாள் போராளிகள், தேவையான கல்வி மற்றும் ஏனைய தகைமைகளைக் கொண்டிருந்தால் அவர்கள் இலங்கை பொலிஸ் சேவையில் இணைந்து கொள்வதற்கான வாய்ப்பை அரசாங்கம் வழங்கியுள்ளது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் புலிகளின் சுமார் 11 ஆயிரம் போராளிகள் இராணுவத்தினரிடம் சரணடைந்தனர். இவர்களில் சுமார் 10,000 பேர் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்தில் ஒன்றிணைக்கப்பட்டுள்ளனர்.

இப்போராளிகள் விரும்பினால் அவர்கள் பொலிஸில் (15 ஆம் பக்கம் பார்க்க)

## நயினை இராஜகோபுர வாசலை இன்று யானை திறக்க ஏற்பாடு



(யாழ்ப்பாணம்)

நயினை நாகபூசணி அம்மன் கோவிலில் இன்று இடம்பெறும் மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு கொழும்பிலிருந்து யானை கொண்டுவரப்படவுள்ளது.

புதிதாக அமைக்கப்பெற்ற இராஜகோபுர வாசற் கதவுகளை இந்த யானை திறந்து வைக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் குதிரை, எருது, பசு போன்ற விலங்குகளும் (15 ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கத்துடனான பேச்சில் சர்வதேச அனுசரணை வேண்டும்


### கோரிக்கை விடுக்கிறது கூட்டமைப்பு

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் தமக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளில் சர்வதேச அனுசரணை இடம்பெறுமானால் அதனை வரவேற்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க பிரதி உதவி இராஜாங்கச் செயலாளரான கலாநிதி அலிஸா அய்ரெஸை சந்தித்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், எஸ்.ஸ்ரீதரன் ஆகியோர், இவ்விடயத்தில் அமெரிக்கா அனுசரணையாளர் பாத்திரமொன்றை வகிக்க வேண்டுமென கோரினர்.

இது தொடர்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரான நாடாளுமன்ற உறுப்பினர் (15 ஆம் பக்கம் பார்க்க)



## காணாமற்போன தமிழ் பெண் தகவல் தருமாறு கோரிக்கை

(ரொறன்ரோ)



கனடா - ரொறன்ரோ பகுதியில் வசித்து வந்த இலங்கை தமிழ் பெண்ணான 31 வயதுடைய சிவலதா செல்லத்தம்பி கடந்த 6 மாதத்திற்கு முன்பு காணாமல் போய் விட்டதாகவும், இவர் பற்றிய தகவல் கிடைத்தால் தமக்கு அறிவிக்குமாறு கனேடிய பொலிஸார் அறிவித்துள்ளனர்.

ஜேன் அன்ட் பிஞ்ச் சந்திப்பை அண்டிய பகுதியில் வசித்து வந்த சிவலதா செல்லத்தம்பி என்ற பெண் கடந்த யூன் 15 ஆம் திகதி 2011 இல் இருந்து காணாமல் போயுள்ளார். அவர் ஐந்து அடி ஐந்து அங்குலம் உயரமுடையவர் என்றும் ரொறன்ரோ பொலிஸார் தெரிவித்துள்ளனர். (15 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்புடனான பேச்சு அடுத்த மாதம் ஆரம்பம்

### அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துச் செல்லவுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக பேச்சுக் குழுவில் கலந்து கொள்ளும் அரச தரப்பு பிரதிநிதிகள் குழுவிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவ விஜேசிங்க தெரிவித்துள்ளதாவது,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் கடந்த 17, 18 மற்றும் 19 ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த பேச்சுவார்த்தைகள் நடைபெறாத நிலையில், அடுத்த மாதம் 7, 8 மற்றும் 9 ஆம் திகதிகளில் மீளவும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.



அரசு - கூட்டமைப்பு பேச்சில் அனுகூலமான வகையில் பல கட்டங்களாக (15 ஆம் பக்கம் பார்க்க)

## சவேந்திர சில்வாவின் நியமனத்துடன் ஐ.நா. செயலருக்குத் தொடர்பில்லை

### தெளிவுபடுத்துகிறார் பேச்சாளர்



(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கைக்கான பிரதி நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவை ஐ.நா. அமைதி காக்கும் படையின் உயர் பதவிக்கு பான் கீ மூன் நியமிக்கவில்லை என அவரின் பேச்சாளர் மார்ட்டின் நெர்ஸ்க்கி தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ஐ.நா. (15 ஆம் பக்கம் பார்க்க)

## அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டாம் ஐ.நா. செயலரிடம் அரசு வேண்டுகோள்

(கொழும்பு)

இலங்கை மீது அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டாம் என அரசாங்கம், ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான் கீ மூனிடம் கோரிக்கை விடுத்துள்ளது. எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமை கவுன்ஸில் அமர்வுகளின் போது இலங்கைக்கு எதிராக பல்வேறு அழுத்தங்கள் பிரயோகிக்கப்படக்கூடுமென தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக தருஸ்மன் குழுவில் அங்கம் வகித்த ஸ்டீவன் ராட்னர், இலங்கைக்கு எதிராக போர்க் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கத் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வறாான அழுத்தங்கள் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பிரகடனத்தை மீறும் வகையில் அமைந்துள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஸ்டீவன் ரட்னரின் சட்டவிரோத செயற்பாடுகள் (15 ஆம் பக்கம் பார்க்க)

# மக்களுக்காக மாநகர சபை சிறந்த பணியாற்ற வேண்டும்



(யாழ்ப்பாணம்)

மக்களின் நலன்களில் அக்கறை கொண்டு மாநகர சபை சிறந்த சேவையாற்றும் அதே வேளை எதிர்காலத்திலும் அதன் பணிகள் செயலூக்கம் உள்ளதாக மாற்றியமைக்கப்பட வேண்டுமென பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ் நகரத்தில் அபிவிருத்தி மேம்பாடு மற்றும் நிர்வாகம் சார்ந்து மாநகரசபை எதிர்கொண்டு வரும் பிரச்சினைகள் தொடர்பில் மாநகர சபையின் துறைசார்ந்த அதிகாரிகளுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மக்களின் சேவைகளையும் நலன்களையும் முன்னிறுத்தியதாகவே மாநகர சபையின் பணிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

யாழ். நகரத்திற்கும் மக்களுக்கும் சேவை செய்யும் பொருட்டு அதன் செயற்திட்டங்கள் பரந்தளவில் விஸ்தரிக்கப்படுவதுடன் சிறந்த செயலூக்கம் உள்ளதொரு நிறுவனமாகவும் அதனை மாற்றியமைக்க வேண்டும். மக்களுக்கு திருப்தி ஏற்படும் வகையில் ஒவ்வொரு ஊழியரும் தமக்கான பணிகளைச் சிறப்பாகச் செய்ய வேண்டும்.

மாநகர சபையின் அபிவிருத்தி மற்றும் மேம்பாட்டுக்காக அனைவரும் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டியது முக்கியமானது என்றும் அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

மாநகரசபை மண்டபத்தில் அமைச்சர் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் மாநகரத்தின் அபிவிருத்தி மேம்பாடு மற்றும் நிர்வாகம் சார்ந்த பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வுகாண வேண்டுமென்பது தொடர்பில் துறைசார்ந்தோரின் கருத்துக்கள் கேட்டறியப்பட்டன.

இக்கலந்துரையாடலில் யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, மாநகரசபை ஆணையாளர் சரவணபவ, வடமாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஷ், உள்ளூராட்சி ஆணையாளர் ஜெகூ ஆகியோருடன் சட்ட ஆலோசகராக முன்னாள் யாழ்.மாவட்ட நீதிபதி விக்னராஜாவும் உடனிருந்தார்.

# வடமராட்சி கிழக்கில் உப்பு அரைக்கும் ஆலை

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துக்கு புலம்பெயர்தலுக்கான சர்வதேச நிறுவனம், ஐக்கிய இராச்சியத்தின் நிதிப் பங்களிப்புடன் 2 மில்லியன் ரூபா செலவில் உப்பு அரைக்கும் ஆலை, கருவாடு பொதிசெய்யும் கட்டடம் ஆகியவற்றை அமைத்து தர முன்வந்துள்ளது.

இதற்கான ஒப்பந்தத்தில் புலம்பெயர்தலுக்கான சர்வதேச நிறுவனம் (I.O.M), வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்'சங்கங்களின் சமாசம் ஆகியவற்றின் பிரதிநிதிகள், சமாச மண்டபத்தில் வைத்து கைச்சாத்திட்டனர்.

இவ்வேலைத் திட்டங்கள் 2012 மாசி மாதம் ஆரம்பித்து 2012 சித்திரை மாதம் 30 ஆம் திகதிக்கிடையில் முடிவுறுத்தப்படும்.

இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்த பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் 32 குடும்பங்களுக்கு கருவாடு பதனிடுவதற்கென தலா 10 ஆயிரம் ரூபா வீதம் 3 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா சுழற்சிமுறைக் கடனாக வழங்கவும் புலம்பெயர்தலுக்கான சர்வதேச நிறுவனம் (I.O.M) முன்வந்துள்ளதாக சமாச வட்டாரங்கள் தெரிவித்தன. (70)

# நெஞ்சுருக நினைவினில்...

தோற்றம் 16 . 08 . 1981



மறைவு 29 . 01 . 2011

## இரத்தினசிங்கம் சதீஸ்

ஓராண்டு கடந்தது நேற்றுப் போல
உன் இழப்பு கனவாகக் கூடாதா!
உன் உருவம் அழிந்ததே தவிர
உன் நினைவுகள் இன்றும் உள்ளதையா!

மக்கள் சேவைக்காய் உன்னை மரித்துக் கொண்டாய்
கல்வியோடு உயர் புகழையும் பெற்றாய்
ஏழைகள் வாழ்வில் ஒளியேற்றினாய்
தமிழரின் வாழ்வுக்காய் தன்னலமற்று உழைத்தாய்

எம்மையெல்லாம் ஆறாத் துயரில்
ஆழ்த்திவிட்டு மறைந்தாலும்
எங்கள் நெஞ்சத்தில் உன் நினைவுகள்
என்றென்றும் நிறைந்திருக்கும்

உன் நினைவுகளோடு
கனவெல்லாம் நினைவாக
நினைவெல்லாம் கனவாக – உன்
ஆத்மா சாந்திக்கு பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.வீதி,
பருத்தித்துறை

(இ)

குடும்பத்தினர்.

# திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

'நியூ ஆரோக்கியா' காட்சியறை இன்று மாலை 4.00 மணிக்கு இல.82, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இந்திய துணைத்தூதர் வி.மகாலிங்கம் திறந்து வைக்கவுள்ளார்.

இந்நிகழ்விற்கு சுதேச வைத்தியர்கள், மருத்துவ பீட மாணவர்கள் உட்படப் பலர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

# சைக்கிள்கள் அன்பளிப்பு

(வடமராட்சி)

வடமராட்சிக் கிழக்கில் வசிக்கும் தொண்டர் ஆசிரியர்கள் 10 பேருக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சைக்கிள்கள் வழங்கியுள்ளார். கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் தொண்டர் ஆசிரியர்களுடனான விசேட சந்திப்பின்போதே இவற்றைக் கையளித்தார். இதேவேளை, மாநகரசபையின் சுகாதார ஊழியர்களுக்கும் நேற்றைய தினம் சைக்கிள்கள் வழங்கப்பட்டன. (எஸ்)

# வலிகாமம் பாடசாலைகளுக்கு சீருடைத்துணி விநியோகம்

பாடசாலை மாணவர்களுக்கென வருடாவருடம் இலவசமாக வழங்கப்படும் சீருடைத் துணி, வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு நேற்று முன்தினம் சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் வைத்து வழங்கப்பட்டுள்ளது.

2012ஆம் ஆண்டுக்குரிய இந்தச் சீருடைத்துணி விநியோகத்தினை வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன், கணக்காளர், களஞ்சியக் காப்பாளர் ஆகியோர் இணைந்து இவற்றை வழங்கி வைத்தனர்.

இச்சீருடை விநியோகம் சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில், தெல்லிப்பளை ஆகிய கோட்டப் பாடசாலைகளுக்கு அப்பாடசாலை அதிபர்களிடம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

ஆண் பிள்ளைகளுக்கு காற்சட்டை, சேட் துணிகளும், பெண் பிள்ளைகளுக்கு சட்டைத்துணியும் வழங்கப்பட்டன. (06)


**சிறு விளம்பரம்**

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088 (C/1186)



# பாராட்டி வாழ்த்துகிறோம்




காரைநகர் கல்வந்தாழ்வு ஸ்ரீமுருகன் தேவஸ்தானத்தின் ஆலயத் திருப்பணிக்கு இந்து கலாசார அமைச்சின் ஊடான நிதி ஒதுக்கீட்டில் இருந்து ஒரு இலட்சம் ரூபா நிதியினை வழங்கியமைக்காக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா**

மற்றும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்

**கௌரவ சில்வேஸ்திரி அலென்ரின்(உதயன்)**

மற்றும் ஈ.பி.டி.பி. யாழ். மாவட்ட அமைப்பாளர் **கந்தசாமி கமலேந்திரன் (கமல்)**

ஈ.பி.டி.பி.யின் காரைநகர் அமைப்பாளரும், பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான

**வீரமுத்து கண்ணன் (ரஜனி)**

ஆகியோருக்கும் எமது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.




**ஐயன் அப்புத்துரை, தலைவர் மற்றும் பொதுமக்கள்**
**ஸ்ரீமுருகன் தேவஸ்தானம், கல்வந்தாழ்வு, காரைநகர்.**

(C/1535)

'தூய்மை, பொறுமை, விடாமுயற்சி ஆகிய இம்மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவையாகும்'

-விவேகானந்தர்

தினமுரசு
தினப்பதிப்பு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## கூட்டமைப்புக்குப் பேசத் தெரிந்தது என்ன?

அரசின் விடாப்பிடிப் போக்கைக் கண்டு தாங்கள் பொறுமையை இழந்துவிட்டதாகவும், இனி அகிம்சைப் போர்தான் என்றும் கூட்டமைப்பின் பேச்சாளரும் தமிழரசுக்கட்சியின் எம்பியுமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். மக்களைத் திரட்டி வீதிக்கு இறங்கப் போவதாகவும் சூளுரைத்துள்ளார்.

இதற்கு ஒரு நக்கல் சிரிப்பை பதிலாக வழங்கிக் கொண்டிருப்பது அரசாங்கமோ, மாற்றுக் கட்சிகளோ அல்லது நம் போன்ற பொது மக்களோ அல்ல. சுரேஷை ஆயுதக்குழுவிலிருந்து வந்தவர் என்றும், மண்டையன் குழுத் தலைவர் என்றும் தங்கள் ஆதரவாளர்கள் மத்தியிலேயே அடிக்கடி குத்திக் காட்டிக் கொண்டிருக்கும் தமிழரசுக் கட்சியினரேதான் இந்த "அகிம்சைப் போர்"க் கதையைக் கேலிசெய்து சிரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நாட்டில் அகிம்சைக்கு காப்புரிமை வாங்கி வைத்திருக்கும் ஒரே ஒரு கட்சியான தமிழரசுக் கட்சியில் இன்னும் உறுப்பினராகச் சேர்ந்து கொள்ளாமலே, சுரேஷ் அந்த வார்த்தையை எப்படிப் பயன்படுத்த முடியும் என்பதுதான் அவர்களது நக்கல் கேள்வி. ஒருவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தனியான கட்சியாகப் பதிவு செய்யும் முயற்சியில் சுரேஷ் தோற்றுப் போனால், அடுத்த கட்டமாக தமிழரசுக் கட்சியில் வந்து சேர்ந்து விடும் முடிவில்தான் இப்படிப் பேச ஆரம்பித்திருக்கிறாரோ என்றும் அவர்கள் எச்சரிக்கையுடன் யோசிக்கக் கூடும்.

கூட்டமைப்புக்குள் தீவிரத் தமிழ்வாதத்தைப் பேசுவதில் அவர்களுள்ளேயே ஒரு போட்டி நிலவுவதும், ஒருவரை ஒருவர் வெட்டி ஓடும் விளையாட்டில் யதார்த்த சூழலை விட்டு வேறொரு களத்திற்கு சென்றுவிடுவதையும் கூர்ந்து அவதானிக்கும் யாரும் தெரிந்துகொள்ள முடியும்.

கூட்டமைப்பைப் பதிவு செய்வதில் அரசின் உதவியை ஒருவர் எதிர்பார்க்கிறார் என்றால், கூட்டமைப்புக்குள் இன்னொருவர், அவரைத் தெரிவுக்குழுவுக்கு ஆதரவாளராக முத்திரை குத்துகிறார். இதன்விளைவாக, தான் தமிழ்த் தேசிய மையத்திலிருந்து வெளியே தள்ளப்படுவதைத் தவிர்க்குமுகமாக அவர் பகைவெறுப்புப் பேச்சுக்களை அள்ளிவிடுவதில் மற்றவர்களை முந்த வேண்டியிருக்கிறது.

கூட்டமைப்பின் ஒரு எம்பி பாராளுமன்ற கிரிக்கெட்டை விளையாடப் போனால், அதைவைத்தே அவரை வீழ்த்திவிடும் தமிழ்த் தீவிரவாதத்தை கூட்டமைப்பின் மற்றொருவர் கையிலெடுத்து விடுகிறார். முன்னவர் தன்னை நிலை நிறுத்திக் கொள்ள எல்லாரையும்விடத் தீவிரமாகத் தெரிவுக்குழுவை எதிர்த்துப் பேச வேண்டியிருக்கிறது.

சிரிப்பு என்னவென்றால், எல்லாப் பாராளுமன்ற உறுப்பினர்களையும்போல வசதிகள் சலுகைகள் எல்லாம் ஒன்றுகுறையாமல் வேண்டும். எம்பி உரிமையுடன் சென்று சிரித்துக் குழைந்து சொந்த அலுவல்களைப் பார்த்துக் கொள்வதும் வேண்டும். ஆனால் மற்ற எம்பிக்களுடன் சேர்ந்து கிரிக்கெட் விளையாடினால், "தமிழன் போய் விளையாடலாமா" என்று கேட்டுத் தீவிரவாதத்தில் ஆவேசமாய் முந்த வேண்டியிருக்கிறது.

இந்த இரட்டைவேட அரசியலின் நீட்சியாகத்தான், மக்களைத் திரட்டி வீதிக்கு இறங்குதலும் அகிம்சைப் போரும் தெரிவுக்குழுவை விரல்நுனியாலும் தீண்ட மாட்டோம் என்றெல்லாம் வீரவசனங்கள் விளைகின்றன. கூட்டமைப்புக்குள்ளேயே அதிக தமிழ்த் தீவிரத்தைக் கதைப்பவர் யார் என்ற போட்டியில், ஒருவரை முந்தி ஒருவர், மக்களுக்கான தீர்வை விட்டுவிட்டு விலகிப் போய்க்கொண்டிருக்கிறார்கள்.

13 பிளஸ்ஸை நிறைவேற்றுவதற்கு ஐ.தே.க. ஒத்துழைக்காது என்று இதோ அறிவித்து விட்டது. இவர்களது கூட்டாளிக் கட்சிதானே அது? அதைத்தான் தேர்தலில் வெல்ல வைக்க வேண்டுமென்று தமிழ்மக்களுக்குச் சொன்னவர்கள்தானே இவர்கள்? குறைந்தபட்சம் அதைக்கூட தீர்வுக்கு இசைவாகத் திருப்ப முடியாதவர்கள் அரசாங்கத்திடம் எதை வெல்ல முடியும்?

இவர்களது பங்காளியான ஐ.தே.க வையே தமிழ் மக்களின் கோரிக்கைக்கு ஆதரவாகப் பேச வைக்க முடியாதவர்களால், வேறு எவரிடம் எதைப் பேசி என்ன சாதிக்க முடியப் போகிறது?

- ஆசிரியர் -

# பெறுபேறுகளில் குளறுபடி; தளர்வடைகிறது நம்பிக்கை

(கொழும்பு

உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் ஏற்பட்ட குளறுபடிகள் காரணமாக கல்வித் துறை தொடர்பில் நாட்டு மக்களின் நம்பிக்கை தளர்வடைந்துள்ளதாகவும், கல்வி துன்றசார் அதிகாரிகளே இதற்கு முழுப் பொறுப்பினையும் ஏற்கவேண்டும் எனவும் விஞ்ஞானத்துறை சார் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலைமையானது நாட்டின் எதிர்காலத்திற்கு நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழக சமூக விஞ்ஞான பிரிவின் பேராசிரியர் பீ.டெனிசன் தெரிவித்துள்ளார்.

கொள்கை ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்போது பரீட்சை தொடர்பில் தற்போது ஏற்பட்டுள்ள வெறுப்புணர்வுகளுக்கு தீர்வு காணமுடியும் எனவும் அவர் குறிப்பிடுகிறார்.

பரீட்சைப் பெறுபேறு குளறுபடிகள் காரணமாக அநீதி இழைக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கு நியாயம் கிடைக்கச்செய்வது சம்பந்தப்பட்ட தரப்பினரின் பொறுப்பாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பரீட்சை தொடர்பிலும் மாணவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள நம்பிக்கையின்மை சமூகத்தில் பாரதூரமான ஒரு நிலைமையை தோற்றுவித்து வருவதாக களனி பல்கலைக்கழக சமூக விஞ்ஞானத் துறை பேராசிரியர் கே.கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கல்வி அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மொஹான் லால் கிரேரோவிடம் தொடர்பு கொண்டு வினவிய போது, எந்தவொரு மட்டத்திலும் தவறு நேரக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகக் கூறினார்.

யாருடைய தலையீடும் இன்றி இயங்கி வருகின்ற கல்வித்துறை சார் உயர் நிறுவனமான பரீட்சைகள் திணைக்களம் மீதான நம்பிக் கையை இழக்கவேண்டிய தில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# டெங்கு நோய்த்தாக்கம்; பள்ளிமாணவன் பலி

(கொழும்பு)

டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்டு மாத்தளை பிரதேசத்தை சேர்ந்த பாடசாலை மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார். உக்குவெல, நாகொல்ல பகுதி பாடசாலையொன்றில் தரம் 11 இல் கல்வி பயின்ற 16 வயதுடைய மாணவர் ஒருவரே டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு உயிரிழந்துள்ளார்.

இதேவேளை கடந்த வருடத்தில் மாத்திரம் 28 ஆயிரத்து 140 பேர் டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்தமை பதிவாகியுள்ளதாக சுகாதர அமைச்சு குறிப்பிடுகின்றது. அத்துடன் கடந்த வருடத்தில் டெங்கு காய்ச்சல் காரணமாக 185 பேர் உயிரிழந்துள்ளதாக அமைச்சின் தொற்று நோய்ப் பிரிவு தெரிவித்துள்ளது.

# ஆயிரம் பாடசாலை அபிவிருத்தி; முதற்கட்டமாக 33 பாடசாலைகள்

(யாழ்ப்பாணம்)

ஆயிரம் பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக வடக்கில் முப்பத்து மூன்று பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

கடந்த 23 ஆம் திகதி கல்வி அமைச்சின் பாடசாலைகள் அபிவிருத்திப்பிரிவில் நடைபெற்ற வடமாகாண கல்வி வலயப்பணிப்பாளர்கள், பிரதிக்கல்விப்பணிப்பாளர்களிற்கான கூட்டத்தில் இத்தீர்மானம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த 1000 பாடசாலை அபிவிருத்திப்பணி இரு கட்டங்களாக நடைபெறவுள்ளதாகவும் முதற் கட்டமாக முப்பத்து மூன்று (33) 1 ab பாடசாலைகள் வடமாகணத்தில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாகவும் அக்கூட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த 33 பாடசாலைகளிலும், இருமாடிக் கட்டடங்கள், ஒன்லையின் சேவை கற்கை நெறி (online services) ஆசிரிய பயிற்சி நிலையம், விளையாட்டு மைதானம் முதலான உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

ஆயிரம் பாடசாலைகளின் அபிவிருத்தித் திட்டத்தில் 2 ஆம் கட்டம் 2013 ஆம் ஆண்டு ஜனவரி முதல் அமுல்படுத்தப்படும் எனவும் அக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் வடமாகாணத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ள பின்னுட்டல் பாடசாலைகள் (feeding school) அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இவற்றை விட 5000 ஆரம்பப் பாடசாலைகளும், யுனிசெப், சேவ் த சில்றன் நிறுவனங்களின் நிதியுதவியுடன் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாகவும் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி கூட்டத்தில் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவும் பங்குபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (06)

# இலங்கையில் அதிகரித்த சீனத் தலையீடு தென்னாசியாவில் புதிய பூகோள மாற்றம்

## சீறுகிறது ஐ.தே.க.

(கொழும்பு)

இலங்கைக்குள் சீனப் பொருளாதார கொலைகாரர்கள் உட்புகுந்து ஆக்கிரமிப்புச் செய்துள்ளனர். அரசாங்கம் நாட்டை சீனாவிடம் தாரைவார்த்துள்ளது. இதனால் இந்தியா கடுமையான அதிருப்திக்குள்ளாகியுள்ளது. எனவே தெற்காசியப் பிராந்தியத்தில் புதியதொரு பூகோள மாற்றம் ஏற்பட்டுள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும்போதே கலாநிதி ஹர்ஷ டி சில்வா இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு துறைகத்தின் வடக்கு இறங்கு துறை விஸ்தரிப்பு திட்டம் மேர்சன்ட் நிறுவனம் மற்றும் உள்ளூர் நிறுவனமான எயிட்கன்ட் ஸ்பென்ஸ், துறைகங்கள் அதிகாரசபை இணைந்து மேற்கொள்வதற்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. இதற்கமைய சீன நிறுவனத்திற்கு 80 வீதப் பங்குகளும் எயிட்கண்ட் ஸ்பென்ஸ் நிறுவனத்திற்கு 30 வீதமும் துறைமுகங்கள் அதிகார சபைக்கு 20 வீதமும் உறுதி செய்யப்பட்டதோடு 35 வருடங்களுக்கு குத்தகைக்கும் இணக்கம் காணப்பட்டது.

ஆனால் இன்று சீன நிறுவனம் அரசியல் ரீதியாகவும் வேறு வழிகளிலும் உள்ளூர் நிறுவனமான எயிட்கன்ட் ஸ்பென்ஸ் மீது அழுத்தங்களை பிரயோகித்ததால், அந்நிறுவனம் இவ் உடன்படிக்கையிலிருந்து வெளியேறியுள்ளது. இதனால் 80 வீத பங்குடமை சீன நிறுவனத்திற்கு கிடைத்துள்ளதோடு 35 வருட காலம் இந்த இறங்கு துறையை நிர்வகிக்கும் அதிகாரம் கிடைத்துள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுகம், நுரைச்சோலை அனல் மின்நிலையம், வானுயர் கோபுரம் அமைக்கும் திட்டங்கள் உட்பட பெரும்பான்மையானவற்றை அரசாங்கம் சீனாவிடமே கையளித்துள்ளது. சீனாவின் பொருளாதாரக் கொலைக்காரர்கள் நாட்டுக்குள் புகுந்து ஆக்கிரமித்துள்ளனர்.

இத்திட்டங்களை எல்லாம் சீனா அன்பளிப்பாக செய்து கொடுப்பதாக அரசாங்கம் தெரிவிக்கின்றது. ஆனால் நான் பொறுப்புடன் கூறுகிறேன். ஒரு சதமேனும் ஒரு டொலரேனும் சீனா அன்பளிப்பாக வழங்கவில்லை அனைத்தும் கடன் என்ற ரீதியிலேயே மேற்கொண்டுள்ளது. சீனாவுக்கு அனைத்தையும் வழங்கிவிட்டு கடனை திருப்பிச் செலுத்த முடியாமல் தடுமாறும் அரசாங்கம் அனைத்தையும் சீன நிறுவன்ங்களுக்கே கையளிக்கும் முயற்சியை முன்னெடுத்து வருகின்றது.

அரசாங்கம் துறைமுகங்களையும் நாட்டையும் சீனாவிடம் தாரைவார்த்துள்ளது. இதனால் இந்தியா கடுமையான அதிருப்தி கொண்டுள்ளது. அத்தோடு தெற்காசிய வலயத்தில் புதியதொரு பூகோளமாற்றம் ஏற்பட்டுள்ளதோடு இவ்வலயத்தில் நெருக்கடிகள் தோன்றும் நிலைமையும் உருவாகியுள்ளது என அவர் தெரிவித்தார்.



நேற்று முன்தினம் யாழ். ரில்கோ ஹோட்டலில் ஆரம்பமாகிய மருத்துவர் சங்கத்தின் யாழ். பிராந்திய மாநாட்டில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன யாழ். போதனா வைத்தியசாலையின் விசேட சத்திரசிகிச்சை நிபுணர் எஸ்.ரவிராஜ் உடன் உரையாடுவதையும் மாநாட்டில் பங்கேற்பதையும் காணலாம். (படம்: பார்த்தீபன்)

## விருது வழங்கலும், சஞ்சிகை வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

இயற்கை பண்பாட்டு மரபு வளப் பாதுகாப்பு மையத்தினால் வட மாகாணத்தில் நடத்தப்பட்ட சூழல் தொடர்பான போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பசுமை அமைதி விருது வழங்கும் நிகழ்வு அடுத்தமாதம் 5 ஆம்திகதி ஞாயிறு பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இங்கு வழங்கப்படும் பசுமை அமைதி விருதுகள் எமது சுற்றுப் புறச் சூழலையும் இயற்கை வளங்களையும் பாதுகாப்பதில்இளம் தலைமுறையினரிடையே விழிப்புணர்வையும், கல்வியையும் பங்களிப்பையும் வளர்த்தெடுக்கும் நோக்கத்துடனேயே வழங்கப்படுகிறன என்பது குறிப்பிடததக்கது.

இந்நிகழ்வில் சமூக அறிவியல் இருமாத சஞ்சிகையான 'நங்கூரம்' வெளியிடப்பட வுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும.(44)

## நிவாரணம் வழங்கல்

(நல்லூர்)

நல்லூர் பிரதேசபை ஜே/89 உதயபுரம மக்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்கியுள்ளது. சுமார் 150 குடும்பங்களுக்கு தலா 5 கிலோ அரிசி, 1 கிலோ சீனி வீதம் கிராம அலுவலர் எம்.ஞானேந்திரனால் வழங்கப்பட்டது.



தமிழரசுக்கட்சித் தலைவர்களுள் ஒருவராக இருந்த மு.திருச்செல்வம் அவர்களின் சிலையின் இன்றைய கோலம் இது. வாக்குகளுக்கு உதவி செய்ய வரமுடியாத யாரையும் கவனிக்கும் வழக்கம் தமிழரசுக் கட்சிக்கு இல்லை என்பதற்கு இந்தச் சிலையும் ஒரு சாட்சி. (எஸ்)

# அபிவிருத்தியின் பயன்கள் உரிய காலத்தில் மக்களிடம் சென்றடைய வேண்டும்

(கிளிநொச்சி)



மக்களுக்காக மக்களின் பணத்தில் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தியின் பயன்கள் உரிய காலத்தில் மக்களுக்குச் சென்றடைய வேண்டும் என ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் நாடளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற கிளிநொச்சி - பூநகரி பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்திற்கு தலைமைதாங்கி உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

போரினால் பாதிப்படைந்த பிரதேசம் என்ற வகையில் அரசு பல்வேறு அபிவிருத்திப் பணிகளை இப்பிரதேசத்தில் மேற்கொண்டு வருகிறது. ஆனால் அதன் பயன்கள் உரிய காலத்தில் மக்களிடம் சென்றடையாமை கவலைக்குரிய விடயமே. எனவே இனிவரும் காலங்களில் இந் நிலைமைகள் நீடிக்கக்கூடாது.

அபிவிருததியின் முழுப்பயனும் அந்தந்த காலப் பகுதிக்குள் மக்களிடம் சென்றடைய வேண்டும். அதற்காக அதிகாரிகள் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அனைவரும் உளப்பூர்வமாக தங்களுடைய பங்களிப்பினை வழங்க வேண்டும். அப்போது தான் பிரதேசத்தின் அபிவிருத்தியினையும் விரைவுப்படுத்த முடியும் என தெரிவித்தார்.

இன்றைய இந்த கூட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் அமைப்பு பிரதிநிதிகள் தங்களுடைய பல்வேறு தேவைகளையும பிரச்சினைகளையும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் என்ற வகையில் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர். இதனை அங்கு சமுகமளித்திருந்த திணைக்களங்களின் உயரதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு சென்று உடனடியாகவும் குறுகிய கால இடைவெளிக்குள்ளும் தீர்வுகளையும் பெற்றுக் கொடுத்ததோடு அதற்குரிய ஏற்பாடுகளையும் மேற்கொண்டார்.

இவ் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட சில முக்கியமான தீர் மானங்களாக குறைந்தளவு வேதனம் பெறும் அரச ஊழியர்களை வீட்டுத்திட்டத்திற்குள் உள்வாங்குவது, கிராஞ்சியில் உள்ள 64 குடும்பங்களுக்கும் கால் ஏக்கர் வீதம் காணி வழங்குவது, அரச காணிகள் ஆக்கிரமிக்கப்படுவதனை தடுத்தல் பிரதேசத்திற்கு வெளியே வியாபார நோக்குடன் மரங்கள் விறகுகள் கொண்டு செல்வதனை நிறுத்துதல் சுற்றுச்சூழல் பாதுகாப்பினை கருதி மணல் அகழ்வதில் கட்டுப்பாடுகளை விதித்தல் மக்களின் நலன் பிரதேசத்தின் அபிவிருத்தி கருதி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தல் போன்றன எடுக்கப்பட்டன.

இக்கூட்டத்திற்கு த.தே.கூ.நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன், கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் ஸ்ரீனிவாசன், பூநகரி பிரதேச செயலர் வசந்தகுமார், ஈ.பி.டி.பி.யின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன் உள்ளிட்ட திணைக்களங்களின் உயரதிகாரிகள் மக்கள் அமைப்பு பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## பிணையில் செல்ல அனுமதி

(யாழ்ப்பாணம்)

போலியான காசோலை வழங்கிய 3 நபர்களுக்கு எதிராக யாழ்.பொலிஸாரினால் யாழ். நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மூன்று வழக்குகளையும் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட யாழ். நீதவான் நீதிமன்ற நீதவான் மா. கணேசராசா முடமாவடியைச் சேர்ந்த நபருக்கு 5 ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும், 1 இலட்சம் ரூபா பெறுமதியான 2 ஆள் பிணையிலும், கொக்குவில் பகுதியைச் சேர்ந்த நபருக்கு 25 ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும், 2 இலட்சம் ரூபா பெறுமதியான 4 ஆள் பிணையிலும், காங்கேசன்துறை வீதியைச் சேர்ந்த நபருக்கு 39 ஆயிரம் ரூபா பணம் செலுத்துமாறும் உத்தரவிட்டு பிணையில் செல்ல அனுமதித்தார்.

மேலும் 3 நபர்களும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் நீதவான் நீதிமன்றில் கையொப்பமிடவும் உத்தரவிட்டுத் தீர்ப்பளித்தார். (எஸ்)

## 'எம்சான்' தொலைபேசி இணைப்புகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தொலைபேசி பாவனையாளர்களுக்கு சீரான துல்லியமாக உரையாடக்கூடிய இணைப்புக்களை வழங்குவதற்கு ஸ்ரீலங்கா ரெலிகொம் நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நடவடிக்கையின் ஒரு கட்டமாக குறிப்பிட்ட பிரதேசங்களில் 'எம்சான்' (MSAN) யூனிற்றுகள் அமைக்கப்பட்டு அதன் மூலம் புதிய வாடிக்கையாளர்களுக்கு இணைப்புக்கள் வழங்கப்படவுள்ளது.

ஏற்கனவே அதிகளவான இணைப்புக்களைப் பெற்றுள்ள பகுதிகளில், புதிதாக தொலைபேசி இணைப்புக்கு விண்ணப்பிப்பவர்களுக்கு இந்த யூனிற்றுக்கள் மூலம் வழங்கப்பட்டு புதிய இலக்கங்கள் வழங்கப்படவுள்ளது.

ஆனைக்கோட்டை வீதி, குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில் ஞானபண்டித வித்தியாலயம் கொக்குவில், கருவேலடிலேன் கொக்குவில், தாவடிச் சந்தி, கோண்டாவில் உப்புமடம், இருபாலை வீதி, கோண்டாவில் சி.சி.ரி.எம். பாடசாலை, உடுப்பிட்டிச் சந்தி (பழைய பொலிஸ் நிலையம்) நெடியகாடு, தொண்டைமானாறு ஆகிய பகுதிகளில் இந்த 'எம்சான்' யூனிற்றுக்கள் பொருத்தப்படவுள்ளன என்றும், இப்பகுதிகளில் ஏற்கனவே தொலைபேசி இணைப்புப் பெற்றவர்கள் புதிதாக இணைப்புப்பெற விரும்பின் அவர்களுக்குப் புதிய தொலைபேசி இலக்கம் வழங்கப்படும் எனவும் இதன்மூலம் மூன்று அல்லது நாலு கிலோ மீற்றர் தூரத்துக்கு இணைப்புக்கள் வழங்கப்படக்கூடியதாக இருக்குமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

## வாழ்வாதாரத்தை உயர்த்த சுழற்சி முறைக் கடன் திட்டம்

(வடமராட்சி)

கடந்தகால போர் நடவடிக்கைகள், இடப்பெயர்வுகளால் பாதிக்கப்பட்ட நாகர்கோவில் கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த 40 மகளிர் அங்கத்தவர்களுக்கு வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் கடற்தொழில் உபகரணம், தையல் இயந்திரம், கோழிக் குஞ்சுகள் வழங்கல் ஆகியவற்றுக்கு சுழற்சி முறைக்கடன்கள் வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை உதயதாரகை மகளிர் சம்மேளனத்தினர் செய்து வருகின்றனர்.

இச் சங்க மகளிர் குழு உறுப்பினர்களில் 19 அங்கத்தவர்களுக்கு ஒவ்வொருவருக்கும் 39 ஆயிரத்து நானூறு ரூபா பெறுமதியான கடற்தொழில் உபகரணங்கள் சுழற்சி முறைக் கடனாக வழங்கப்படவிருப்பதாகவும், மிகுதியான 21 அங்கத்தவர்களுக்கும் தையல் இயந்திரங்களும், கோழி வளர்ப்புக்கான நிதி உதவிகளும் சுழற்சி முறைக் கடனாக வழங்கப்படவிருப்பதாகவும், உதயதாரகை மகளிர் சம்மேளனப் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (70)

## கடற்தொழில் கூட்டுறவுச் சங்க நிர்வாகிகள் தெரிவு

(வடமராட்சி)

மணற்காடு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் அண்மையில் நடைபெற்றபோது கீழ் காண்போர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். அவர்களின் விபரம் வருமாறு:

தலைவர் லூ.பா.ப.மரியதாஸ், உபதலைவர் அ.கோ.குணசீலன், செயலாளர் சூ.மா.கியூமன, உப செயலாளர் றொ.அ.நிநாளினி, பொருளாளர் யே.வ.கமலதாஸ்.

நிர்வாக உறுப்பினர்களாக இ.பிரபாகரன், சூ.அ.உதயகுமார் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுளளனர்.

நாகர்கோயில் கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் அண்மையில் நடைபெற்றது. கீழ் காண்போர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் சி.புஸ்பராசா, உபதலைவர் கி.சிவசாமி, செயலாளர் சி.விக்னேஸ்வரன், உப செயலாளர், கி.தமிழ்வாணி, பொருளாளர் வ.வதனராசா.

நிர்வாக உறுப்பினர் : சி.பாலசசந்திரன், மு.வெற்றிவேல் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

குடத்தனை வடக்கு கடற் தொழிலாளர் கூட்டுறவு வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் அண்மையில் நடைபெற்றபோது கீழ்காண்போர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் எம்.அழகராசா, உபதலைவர் க.கனகரத்தினம், செயலாளர் இ.தர்சேந்திரன், உபசெயலாளர் யே.மதியழகன், பொருளாளர் பா.கார்த்தீகன்.

நிர்வாக உறுப்பினர்கள்: த.சதீஸ்வரன், செ.சரோஜினி தேவி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (70)



தெல்லிப்பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம் அங்கத்தவர்கள், பணியாளர்கள் முன்பள்ளி ஆசிரியர்கள் ஆகியோருக்கு பொங்கல் பரிசு வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# யாழ்ப்பாணம்-காங்கேசன்துறை வீதி புனரமைப்புப் பணி தாமதம் ஏன்?

## 18 மாதங்களில் பூர்த்தியாகுமா?

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறைவீதி அகலிப்புப் பணி ஆரம்பிக்கப்பட்டு 12 மாதங்கள் சென்றபோதும் சிறு தூரமாவது இன்றுவரை பூரணப் படுத்தப்படாமையால் அவ்வீதியால் பயணிக்கும் பயணிகள் பாரிய சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கடந்த வருட ஆரம்பத்தில் இவ்வீதியின் அகலிப்புப்பணிகள் முதற்கட்டமாக இணுவில் தியேட்டரடியில் இருந்து ஆரம்பிக்கப்பட்டு மருதனார்மடம் ஆஞ்சநேயர் கோவில் வரையான 500 மீற்றர் நீளமான வீதி அகலிப்பு ஆரம்பிக்கப்பட்டு 12 மாதங்கள் கழிந்த நிலையில் ஒரு மீற்றர் தூரமாவது பூரணப்படுத்தப்படவில்லை.

யாழ்ப்பாணத்தில் இருந்து காங்கேசன்துறைவரையான 18.05 கிலோமீற்றர் தூரமுடைய இவ்வீதி 30 மாதங்களுக்குள் முடிவுக்குக் கொண்டுவருவதற்கு ஒப்பந்தகாரருடன் ஒப்பந்தம் செய்த போதிலும் அவ்வொப்பந்தக்காரரின் வேலையில் திருப்தியின்மையும் வேகமும் காணப்படாமையால் இரணடாவது ஒப்பந்தகாரரிடம் வேலை ஒப்படைக்கப்பட்டதாகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

500 மீற்றர் தூரம் வீதி அமைப்பதற்கு 12 மாதங்கள் சென்றால் 18.5 கிலோ மீற்றர் தூரம் அமைப்பதற்கு எத்தனை வருடங்கள் செல்லும் என பயணிகள் அங்கலாய்க்கின்றனர்.

இவ்வீதி அகலிப்புப் பணிகளின் ஒரு அங்கமாக வீட்டு உரிமையாளர்களின் மதில்கள் உடைக்கப்பட்டு புதிய மதில்கள் வேகமாகக் கட்டப்பட்டு வருவதையும் மதகுகள் அகலிக்கப் படுவதையும் காணக்கூடியதாக உள்ளது.

முதலாவது ஒப்பந்தகாரரினால் பொடப்பட்ட 500 மீற்றர் தூரமான வீதி முன்னைய வீதியிலும் பார்க்க சுமார் 18 அங்குலம் உயரத்தில் போடப்பட்ட நிலையில் அதனைக் கிளறிப் போடுமாறு பணிக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை 17.3 கிலோமீற்றர் நீளமான பலாலி வீதியும் 34 கிலோ மீற்றர் நீளமான பருத்தித்துறை வீதியும், துரித கதியில் போடப்பட்டுவருவதாகவும், காங்கேசன்துறை வீதி மட்டும் மந்த கதியில் போடப்படுவதால் பயணிகள் போக்குவரத்தில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் இதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடிய கவனம் செலுத்தவேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விட்ட வண்ணமுள்ளனர்.

# நெடுங்குள மக்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண அமைச்சர் நடவடிக்கை

யாழ்.நெடுங்குளம் மக்களது பிரச்சினைகளுக்கு அப்பகுதிக்கு நேரில் சென்று துறைசார்ந்த அதிகாரிகளுடன் ஆராய்ந்து முடிவெடுக்கப்படுமென பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அமைச்சரின் யாழ். அலுவலகத்திற்கு நேற்றுமுன்தினம் விஜயம் மேற்கொண்டு கொழும்புத்துறை கிழக்கு நெடுங்குளம் பகுதியைச் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகள் தமது பிரச்சினைகள் தொடர்பாக அமைச்சர் அவர்களிடம் எடுத்து விளக்கினார்.

மக்களது கோரிக்கைகள் மற்றும் பிரச்சினைகளைக் கேட்டறிந்து கொண்ட அமைச்சர் இவ்விடயம் தொடர்பாக அடுத்த மாதம் முதல்வாரத்தில் அப்பகுதிக்கு விஜயம் மேற்கொண்டு காணி விடயம் மற்றும் வீட்டுத் திட்டம் உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு துறைசார்ந்த அதிகாரிகளுடன் கலந்துரையாடி உரிய தீர்வைப்பெற்றுத் தருவதாகவும் அதுவரையில் பொறுமை காக்கும் அதேவேளை இவ்விடயத்தில் தமக்கு முழுமையான ஒத்துழைப்பும், ஒத்தாசையும் வழங்குமாறும் கேட்டுக் கொண்டார். இதன் போது யாழ்.மாநகர மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா யாழ்.மாநகர சபை உறுப்பினர் றீகன் ஆகியோர் உடனிருந்தனர்.

# மகாத்மா காந்தியின் 64ஆவது ஆண்டு நினைவு

மகாத்மாகாந்தியின் 64ஆவது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நாளை 30ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யாழ். போதனாவைத்தியசாலைக்கு முன்பாக அமைந்துள்ள மகாத்மா காந்தி திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தும் நிகழ்வு இடம்பெறும். இந்நிகழ்வை அகில இலங்கை காந்தி சேவா சங்க தலைவர் தி. இராசநாயகம் தொடக்கி வைப்பார் இதனைத் தொடர்ந்து 774, ஆஸ்பத்திரி வீதியில் உள்ள அ.இ.கா.சேவா சங்க யாழ். மாவட்டக் கிளையில் அஞ்சலி நிகழ்வு இடம்பெறும்.

அகில இலங்கை காந்திசேவா சங்க யாழ். மாவட்ட கிளைத் தலைவர் கா. கார்த்திகேசு தலைமையில் இடம்பெறவுள்ள அஞ்சலி நிகழ்வில், யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர் நா. புவனேந்திரன் 'சத்தியமே இலட்சியமாய்' என்னும் தலைப்பிலும், அகில இலங்கை காந்தி சேவா சங்க பொதுச்செயலாளர் வி.ஜி.தங்கவேலு '44 ஆவது சர்வதேச மாநாடு ஒருபார்வை' என்னும் தலைப்பிலும் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளனர்.

# முரசின் இன்றைய பலன்

(29.01.2012 -ஞாயிற்றுக்கிழமை)

கர வருஷம் தை மாதம் 15 ஆம் திகதி. ஷஷ்டி முன் இரவு 6.47 வரை.
நட்சத்திரம் ரேவதி, அமிர்தம் பிற்பகல் 12.50 வரை. ஷஷ்டி விரதம்
இராகுகாலம் 5.06 - 6.36 வரை. சுபநேரம் 9.36 - 11.06 வரை.
எமகண்டம் 12.36 - 2.06 வரை. குளிகை காலம் 3.36 - 5.06 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | உற்சாகம், உறவினர் வருகை, வாழ்க்கையில் திருப்தி, சொத்துச்சேரும். |
| ரிஷபம் | மனஉறுதி, பங்காளிகளால் கெடுபிடி, உடல் ஆரோக்கியம், நற்செய்தி. |
| மிதுனம் | உயர்வு, வாகனக் கஷ்டம், பயணச்செலவு, முயற்சியில் வெற்றி. |
| கடகம் | அதிகாரிகள் சகாயம், பேச்சில் நிதானம், திருமணம் கூடிவரும், தெய்வ வழிபாடு. |
| சிம்மம் | குடும்பநலம், நண்பர்கள் உதவி, பெருமதிப்பு, பிரச்சினைகள் தீரும். |
| கன்னி | பெருமை, உற்சாகமிகுதி, ஸ்தலயாத்திரை, குடும்பச்சிறப்பு. |
| துலாம் | தெய்வபக்தி, அந்நியரால் உபத்திரவம், பந்தய ஈடுபாடு, அதிகாரிகள் உறவு. |
| விருச்சிகம் | வாகன சுகம், வேலைவாய்ப்பு, ஆடம்பரச் செலவு, காரியானுகூலம். |
| தனுசு | உற்சாகம், கொடுக்கல் வாங்கல்களில் கெடுபிடி, பயணவாய்ப்பு, குதூகலம். |
| மகரம் | செலவு அதிகரிப்பு, சொத்துக்களில் திருப்தி, அதிருப்தி, புதிய சிந்தனை. |
| கும்பம் | சிறுபயணம், சுபகாரியம், குடும்ப முன்னேற்றம், சந்தோஷம். |
| மீனம் | அலைச்சல், வெளியூர் வாசம், புத்திரர் மீது கவனம், பொருள் சேரும். |

# பனை, தென்னை வள கூட்டுறவுச்சங்கங்கள் 2012இற்கான முன்மொழிவுகள் சமர்ப்பிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கங்கள், கொத்தணிகள், மற்றும் சமாசம் என்பன 2012ஆம் ஆண்டுக்கான தமது அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பான முன்மொழிவுகளை கூட்டுறவு அபிவிருத்தி உதவியாளர் வி. கே. அருந்தவநாதனிடம் சமர்ப்பித்துள்ளன.

2012ஆம் ஆண்டு மேற்படி நிறுவனங்களின் உள்ளூர் உற்பத்தி ஊக்குவிப்பு ஆண்டாக கூட்டுறவு அபிவிருத்தித்திணைக்களத்தினால் பிரகடனப் படுத்தப்பட்டதை அடுத்தே அந்நிறுவனங்கள் தமது அபிவிருத்தித்திட்டங்களை அவருக்கு அனுப்பி வைத்துள்ளன.

வடமாகாண பனை தென்னைவள அபிவிருத்திக்கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம் சோடாமூடி உற்பத்தி செய்யும் இலாபத்திலும் கொள்வனவு செய்வதற்கு, வலிகாமம் கொத்தணி பனம் பொருள் சார்ந்த உப உணவு உற்பத்திக்கும், ஊறகாவற்றுறைச் சங்கம் 5 ஏக்கர் காணியில் தென்னைப் பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்கும், பருத்தித்துறைச் சங்கம் பனைசார் உற்பத்தி மற்றும் உப உணவுகள், பொதி செய்தல் ஆகியவற்றுக்கும் சுன்னாகச்சங்கம் கைப்பணிப்பயிற்சி பன்னவேலைக்கும், அச்சுவேலிச்சங்கம். தும்பு கயிறுதிரித்தல் உற்பத்திக்கும், பண்டத்தரிப்பு கரவெட்டி, மானிப்பாய், சாவகச்சேரி, காரைநகர், கொடிகாமம் ஆகிய சங்கங்கள் பனை வெல்ல உற்பத்தியை நவீன மயப்படுத்துவதற்கும், கோண்டாவில் சங்கம் பனை வெல்ல உற்பத்தியை மேற்கொள்வதற்கு உபகரணக்கொள்வனவுக்கும் நிதி உதவி கோரியும் முன்மொழிவுகளை முன் வைத்துள்ளன.

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழில் நுட்ப சேவையின் ஏற்றுமதி விவசாயத்திணைக்களத்தின் 11'ஆ' வகுப்பின் ஆராய்ச்சி உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப்பரீட்சை 2012இற்கு இலங்கைப்பிரஜைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் 18வயதுக்குக் குறையாமலும், 45வயதுக்கு மேற்படாமலும் இருத்தல்வேண்டும். ஏற்கனவே அரச சேவையில் உள்ளவர்களுக்கு உச்சவயதெல்லை ஏற்புடையதாகாது.

விண்ணப்பிக்க விரும்புவோர் 2012.02.29 ஆம் திகதி அன்று அல்லது அதற்கு முன்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள் பிரிவு, இலங்கை பரீட்சைத்திணைக்களம், பெலவத்தை, பத்திரமுல்லை என்னும் விலாசத்துக்கு பதிவுத் தபால் மூலம் விண்ணப்பிக்கவேண்டும்

மேற்படி பதவிக்குரிய கல்வித்தகமை, மாதிரி விண்ணப்பப்படிவம் என்பவற்றை தினமுரசு காரியாலயத்தில் பார்வையிடலாம்.

# சமுர்த்தி உத்தியோகத்தர் விபரம் சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

அநுராதபுரம் மாவட்டத்தில் ஓயாமடுவையில் நடைபெறவுள்ள தேசத்திற்கு மகுடம் தேசிய கண்காட்சியை ஒட்டி நடைபெறவுள்ள அபிவிருத்தித்திட்டங்களில் கடமையாற்ற விரும்பும் சமுர்த்தி உத்தியோகத்தர் விபரங்களை சமுர்த்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் ஆர் பி.பி. திலகசிறியினால் கோரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இது சம்பந்தமாக சகல மாவட்ட சமுர்த்திப்பணிப்பாளர்கள், பிரதிப்பணிப்பாளர்கள், உதவிப்பணிப்பாளர்கள் ஆகியோருக்கு சுற்றுநிருபம் ஒன்றின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



யா/வல்வை அமெரிக்கன் மிசன் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலென்ரின் அவர்கள் தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து பாடசாலைக்கு ஒருதொகுதி தளபாடங்களை வழங்கியுள்ளார். இவ் உபகரணங்களை பாடசாலை அதிபர் சக்திவேலிடம் நாடாளுமன்ற உறுப்பினர் கையளிப்பதையும் அருகில் ஆசிரியர்கள் வல்வெட்டித்துறை நகரசபை எதிர்க்கட்சித்தலைவர் பொ.தெய்வேந்திரம் ஆகியோர் நிற்பதையும் காணலாம். (116)

# இலங்கையில் இன நல்லிணக்கத்தை உருவாக்க ஐரோப்பிய நாடுகள் தொடர்ந்து உதவவேண்டும்

(ஜெனீவா)

யுத்தத்தால் சிதைந்துபோன இலங்கையில் இன நல்லிணக்கத்தையும், புனர்வாழ்வு நடவடிக்கைகளையும் ஒருங்கிணைந்த வகையில் மேற்கொள்வதற்கு ஐரோப்பிய நாடுகள் தமது ஆதரவைத் தொடர்ந்து வழங்க வேண்டும் என்று ஏகோபித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

ஐரோப்பிய நாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஐரோப்பிய ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் போன்றோர் கடந்த 5 ஆம் திகதி ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் சந்தித்து கலந்துரையாடிய போதே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினரான Van Orden அங்கு கருத்துரைக்கையில், இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொதுவில் உடன்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

அண்மையில் இலங்கைக்கு சென்று திரும்பிய நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதன் போது கருத்துக்களை பகிர்ந்துக் கொண்டனர்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டுள்ள போதும் அதனை நடைமுறைப்படுத்த இலங்கை அரசாங்கம் முன்வரவேண்டும் என்று இதன்போது வலியுறுத்தப்படடது. இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வைக்காண நல்லிணக்கம் ஏற்படுத்தப்படுவது அவசியமானதாகும். இந்தநிலையில் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை இறுதிப்போரில் இடம்பெற்ற குற்றச்செயல்கள் குறித்த தகவல் எதனையும் வெளியிடாமையால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அந்த அறிக்கையை முழுமையாக நிராகரித்துள்ளது.

எனவே இலங்கை அரசாங்கம் குறித்த விடயங்கள் தொடர்பிலும் தமது கவனத்தை திருப்ப வேண்டும் என்று ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கருத்துரைத்தனர்.

இதன்போது கருத்துரைத்த ஐரோப்பிய ஒன்றியத்துக்கான இலங்கைத் தூதுவர் ரவீந்திரநாத் ஆரியசிங்க, நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை நடைமுறைப்படுத்த அவகாசம் தேவைப்படுவதாக குறிப்பிட்டார்.

# புலனாய்வுப் புலிகள் ஊடுருவுவதை தடுக்க கட்டுநாயக்காவில் விசேட ஏற்பாடுகள்

(கொழும்பு)

சுற்றுலா விசாக்களைப் பயன்படுத்தி புலிகளின் புலனாய்வாளர்கள் நாட்டுக்குள் நுழைவதைத் தடுத்து நிறுத்த அரசு விசேட திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

இதற்காக கட்டுநாயக்கா விமான நிலையத்தில் விசேட ஏற்பாடுகள் செய்யபபட்டுள்ளன. குறிப்பாக பயங்கரவாதம், அடிப்படைவாத மதக் கோட்பாடுகளை வியாபித்தல் போன்ற நோக்கங்களுக்காக நாட்டுக்குள் பிரவேசிப்போரைத் தடுக்கும் வகையில் கட்டு நாயக்க விமான நிலையத்தில் கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்பட உள்ளன.

இந்தக் கமராக்களின் மூலம் நாட்டுக்குள் பிரவேசிப்போர் மற்றும் நாட்டிலிருந்து வெளியேறுவரின் புகைப்படங்களை சேகரித்துக் கொள்ளமுடியும் என தெரிவிக்கப்படுகிறது.

சுற்றுலா வீசாக்களைப் பயன்படுத்தி புலிகளின் புலனாய்வுப் பிரிவினர், நாட்டுக்கு எதிரான அரச சார்பற்ற நிறுவனங்கள், சர்வதேச குற்றச் செயல்களுடன் தொடர்புடைய நபர்கள் நாட்டுக்குள் பிரவேசிப்பதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் இவ்வாறான கமராக்கள் பொருத்தப்படாத காரணத்தினால் பல தேசவிரோதிகள் நாட்டுக்குள் பிரவேசித்து நாசவேலைகளில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# தேசிய சுதந்திர தின நிகழ்வுகள் இம்முறை அனுராதபுரத்தில்

(கொழும்பு)

இலங்கையின் 64 ஆவது தேசிய சுதந்திர தின நிகழ்வுகள் இம்முறை அனுராதபுரத்தில் நடைபெறவுள்ளது. 'ஆச்சரியமிக்க தேசமொன்றை கட்டியெழுப்புவோம்' என்ற தொனிப் பொருளில் இம்முறை சுதந்திர தின நிகழ்வுகள் நடைபெறவுள்ளதாக பொது நிர்வாக அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் சுதந்திர தின நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. பாரிய அளவில் முப்படையினரின் மரியாதை அணி வகுப்புக்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டாவது தடவையாக அனுராதபுரம் நகரில் இம்முறை சுதந்திர தின நிகழ்வுகள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதே வேளை, சுதந்திரதினமன்று நாட்டின் சகல மதுபானசாலைகளும் மூடப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கைக்கு எதிராக சர்வதேச பிரசாரம் ஐ.நா. விடம் அரசு கடும் கண்டனம்

(கொழும்பு)


ஐ.நா. நிபுணர்குழு உறுப்பினர் ஒருவர் விதிமுறைகளுக்கு எதிராக ஐ.நா. அங்கத்துவ நாடு ஒன்றுக்கு எதிராக சர்வதேச அளவில் செயற்படுவது குறித்து இலங்கை அரசு தனது கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

குறிப்பாக தருஸ்மன் குழுவில் அங்கம் வகித்த ஸ்டீவன் ராட்னர் ஐ.நா. மனித உரிமை மாநாட்டில் இலங்கைக்கு எதிராக போர்க் குற்றச்சாட்டுக்களை முன் வைக்கத் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வறான அழுத்தங்கள் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பிரகடனத்தை மீறும் வகையில் அமைந்துள்ளது என அரசாங்கம் தெரிவித்துள்ளது. ஸ்டீவன் ரட்னரின் சட்டவிரோத செயற்பாடுகள் குறித்து, ஜெனீவாவிற்கான இலங்கைத் தூதுவர் தமரா குணநாயகம் அரசாங்கத்திற்கு தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட குழு உறுப்பினர் ஒருவர், உறுப்பு நாடு ஒன்றுக்கு எதிராக செயற்படும் முதல் சந்தர்ப்பம் இதுவென இலங்கை அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

# ஊடக சுதந்திரம் பேணல்; அமெரிக்கா இப்போது பின்னடைவு



## இலங்கையில் உரிமை மீறினால் போர்க்கொடி

(கொழும்பு)

ஊடக சுதந்திரத்தைப் பேணிப பாது காக்கும் நாடுகள் வரிசையில் முன்னணியில் திகழ்ந்த அமெரிக்கா தற்போது இந்த விடயத்தில் பின்னடைவைச் சந்தித்துள்ளது.

ஊடக சுதந்திரத்தைப் பாதுகாக்கும் நாடுகளின் பட்டியலில் 27 ஆவது இடத்தில் இருந்த அமெரிக்கா அதன் கடந்த காலச்செயற்பாடுகள் காரணமாக மேற்படி தரவரிசைப்பட்டியலில் 47 ஆவது இடத்துக்கு பின்தள்ளப்பட்டிருக்கிறது.

எல்லைகளைக் கடந்த பத்திரிகையாளர் என்ற சர்வதேச அமைப்பு தனது வருடாந்த அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்,

எனினும் இலங்கையில் ஊடக உரிமைகள் மீறபபடுவதாகவும், இதனால் இலங்கை அரசுக்கெதிராக சர்வதேச அமைப்புக்களின் ஊடாகப் பிரசாரங்கள் மேற்கொள்ளும் முனைப்புக்களுக்கு அமெரிக்கா மறைமுக ஆதரவு தெரிவித்து வருவதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊடக சுதந்திரத்தை சீர்குலைக்கும் நாடுகளின் தரப்படுத்தலில் ஆப்கானிஸ் தான் 150 ஆவது இடத்தையும் பாகிஸ்தான் 151 ஆம் இடத்தையும் பெற்றுள்ளன. பாகிஸ் தானில் கடந்தாண்டு 10 ஊடக வியலாளர்கள் படுகொலை செய்யபபட்டுள்ளார்கள். லிபியா இந்தத் தரப்படுத்தலில் 154 ஆவது இடத்தையும் யேமன் 171 ஆவது இடத்தையும் வகிக்கின்றன. மனித உரிமை மீறல்கள், யுத்தக் குற்றசசாட்டுகள் பற்றி ஏனைய நாடுகளைக் குற்றஞ் சாட்டி வரும் அமெரிககா போன்ற நாடுகள் மனித உரிமை மீறல்கள் விடயத்தில் மிகவும் மோசமான முறை யில் நடந்து கொண்டிருப்பதற்கான ஆதாரங்கள் இப்போது வெளிப்பட்டுள்ளன.

ஈராக்கில் 24 பேரை படுகொலை செய்த அமெரிக்க இராணுவ உத்தியோகத்தர் ஒருவருக்கு அமெரிக்க அரசாங்கம் 3 மாத சிறைத்தண்டனையை மாத்திரம் விதித்தது. அவரது சம்பளத்தை அரசாங்கம் பறி முதல் செய்ய வேண்டுமென்று விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமெரிக்க அரசாங்கம் மறுப்பு தெரிவித்து, அவரது சமபளம் தடுக்கப்பட்டால் அந்த உத்தி யோகத்தரின் குடும்பத்தினர் கஷ்டப்படுவார்கள் என்ற காரணத்தைக் காட்டி அக் கோரிக்கையை நிராகரித்தது.

இவ்விதம் அமெரிக்கா மனித உரிமை மீறல்கள், ஊடக சுதந்திரம், யுத்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக ஒன்றுக்கொன்று மாறுபட்ட கொள்கைகளை கடைப்பிடித்து வருகின்றது.

தானும் தன்னை ஆதரிக்கும் நாடுகளும் மனித உரிமைகளை மீறினால் அது குற்றமல்ல என்ற போக்கில் இருந்து வரும் அமெரிக்காவும் அதனைச் சார்ந்த மேற்கத்தேய நாடுகளும் சிறிய நாடுகளில் மனித உரிமை மீறல்கள் இடம் பெற்றதாக குற்றச் சாட்டுகளை சுமத்தி சரவதேச ரீதியில் அந்நாடுகளுக்கு பெரும் தீங்கை ஏற்படுத்தி வருகின்றன என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

# எல்லைதாண்டும் மீனவர் மீது சட்ட நடவடிக்கை அரசின் போக்கை இந்தியா ஜீரணிக்கவில்லை

## ஆங்கில நாளிதழ் வெளியிடும் தகவல்

(கொழும்பு)

எல்லைதாண்டும் இந்திய மீனவர்கள் விடயத்தில் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதை இந்திய அரசு விரும்பவில்லை என்று கொழும்பு ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டிருக்கிறது.

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்களை கடற்படை கைது செய்வதற்கு இந்தியா எதிர்ப்புத் தெரிவித்துள்ளதாகவும், இந்த விடயத்தில் இலங்கை மீது இந்தியா கடுமையான அழுத்தங்களை பிரயோகிப்பதாகவும் கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு புல்மோட்டைக்கு வடககே, ஆறு விசைப்படகுகளில் அத்துமீறி மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது 43 தமிழக மீனவர்களும் கைதுசெய்யப்பட்டதற்கு இந்தியா எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

அததுடன் இவர்களை உடனடியாக விடுதலை செய்யும் படியும் இந்தியா அழுத்தம் கொடுத்துள்ளது. இதனை அடுத்து, 43 மீனவர்களும் திருகோணமலை நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் இந்தியத் தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

தற்போது திருகோணமலை வை.எம்.சி.ஏ மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள இவர்களை இந்திய கடலோரக் காவல்படையினர் வந்து அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கைது செய்யப்படும் மீனவர்களை விடுவிக்கும் நிகழ்வுகள் இதற்கு முன்னர் இந்திய - இலங்கை கடல எல்லையிலேயே நடைபெறுவது வழக்கம். ஆனால் இம்முறை மீனவர்களை அழைத்துச் செல்வதற்கு இந்திய கடலோரக் காவற்படை இலங்கை கடற்பரப்புக்கு வரவுள்ளதாகவும் கொழும்பு நாளிதழ் தெரிவித்துள்ளது.

இந்த மாதத்தில் மட்டும் 8 படகுகளும் 56 மீனவர்களும் இந்தியாவின் தலையீட்டினால் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இது மீனவர்களின் ஊடுருவலை அங்கீகரிக்கக் கோரும் அழுத்தமாக அமைந்துள்ளதாகவும், இந்தியாவின் தலையீட்டினால் இந்த விடயத்தில் உள்நாட்டுச் சட்டத்தை இலங்கையினால் நடைமுறைப்படுத்த முடியாமல் போயுள்ளதாகவும் அந்த நாளிதழ் குறிப்பிட்டுள்ளது.

# மனித உடற்பாகங்கள் விற்பனை இலங்கை தற்போது முன்னணியில்



## வெளிக்கிளம்பும் அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

மனித உடற் பாகங்களைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் சிறுவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கும் வர்த்தகம் பற்றிய தகவல்களை சிங்களப் பத்திரிகையொன்று வெளிச்சத்திற்குக் கொண்டு வந்துள்ளது.

உடற்பாகங்களைப் பெற்றுக் கொள்வதற்காக இலங்கைச் சிறுவர் சிறுமியர் பாரியளவில் இவ்வாறு வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிறுவர்களின் உடற்பாகங்களை விற்பனை செய்யும் முக்கிய நாடுகளில் இலங்கை முன்னணி வகிப்பதாகக் குறிப்பிடப்படுகிறது.

சில ஆண்டுகளில் ஆயிரக்கணக்கான சிறுவர் சிறுமியர் வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். அரசியல்வாதிகள், சட்டத்தரணிகள், உயர் தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்கள் போன்றோரின் ஒத்துழைப்புடன் இந்த வர்த்தகம் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கில் சிறுவர் சிறுமியர் காணாமல் போதல் சம்பவங்கள் அதிகளவில் பதிவாகியுள்ளதாகவும், இவர்களில் பலர் இவ்வாறு உடற்பாகங்களுக்காக வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கலாம் எனவும் குறித்த சிங்களப் பத்திரிகை செய்தி வெளியட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு மே மாதம் முதல் 2010 ஆம் ஆண்டு இறுதி வரையில் வடக்கில் 700 சிறுவர் சிறுமியர் காணாமல் போதல் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

உலகின் மிக அதிகளவில் சிறுவர் உடற்பாகங்கள் விற்பனை செய்யப்படும் நாடான இந்தியாவிற்கு சிறுவர் சிறுமியர் அழைத்துச் செல்லப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## இல்ல மெய்வன்மைப் போட்டி

(வடமராட்சி)

யாழ். மாமுனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் 31ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு பாடசாலை அதிபர் க. சந்திரமோகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ள இப்போட்டியில் மருதங்கேணி கோட்டக் கல்வி அதிகாரி க. பொன்னையா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (70)

□□□

(முழங்காவில்)

முழங்காவில் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் முதலாம் திகதி பிற்பகல் 11 மணியளவில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் எஸ். கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே.செல்வராசா கலந்து கொள்ளவுள்ளார். (112)

## தேசிய மட்ட நீச்சல் போட்டியில் முதன் முறையாக மத்திய கல்லூரி



(யாழ்ப்பாணம்)

தேசிய ரீதியில் இடம்பெறவுள்ள நீச்சல் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி வீரர்கள் முதன் முறையாகப் பங்கு கொள்ளவுள்ளனர். இலங்கை தேசிய மட்ட நீச்சல் போட்டி அடுத்த மாதம் 9 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை தொடர்ந்து மூன்று நாட்கள் கொழும்பு ஆனந்தாக் கல்லூரி நீச்சல் தடாகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பொலிஸ் நிலைய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே.பி.என். நெவில் பத்மதேவாவின் தலைமையில் 9,11, 13, 15, 15 வயதுக்குட்பட்ட வீரர்கள் இப்போட்டிக்குச் செல்லவுள்ளனர்.

இப்போட்டிக்கு செல்லவுள்ள வீரர்களுக்கான உடைகள் மற்றும் போக்குவரத்துச் செலவுகள், போட்டிகளில் பங்குபற்றுவதற்கான கட்டண வசதிகள் அனைத்தையும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா வழங்கியுள்ளார். (எஸ்)

## நெடுந்தீவு பிரதேச விளையாட்டுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான கபடி மற்றும் எல்லே, குழு நிலைப் போட்டிகள் இன்று காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கீக்கிரியாம்பிள்ளை மைதானத்தில் நடைபெறவுள்ள இப்போட்டிகளில் சென்ஜோன்ஸ், உதயசூரியன், ஐக்கிய தீபம், சென் அன்ரனிஸ், ஸ்ரார் ஆகிய விளையாட்டுக்கழக வீர, வீராங்கனைகள் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எஸ்)



நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியை முன்னிட்டு அப்பாடசாலை வீர, வீராங்கனைகளுக்கிடையில் நேற்று மரதன் ஓட்டப் போட்டி நடத்தப்பட்டது. இதில் ஆண்கள் பிரிவில் நிரேஜ் முதலாமிடத்தையும், முரளி இரண்டாமிடத்தையும், அமுதசுதன் மூன்றாமிடத்தையும், பெண்கள் பிரிவில் எம். தர்மினி முதலாமிடத்தையும், லக்சனா இரண்டாமிடத்தையும், பி. பிரியந்தினி மூன்றாமிடத்தையும் பிடித்தனர். (12)

## தொடரை வென்றது பாகிஸ்தான்



(டுபாய்)

இங்கிலாந்து அணிக் கெதிரான டெஸ்ட் தொடரை பாகிஸ்தான் அணி கைப்பற்றியது.

இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது போட்டி டுபாயில் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் 257 ஓட்டங்களையும், இங்கிலாந்து 327 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய பாகிஸ்தான் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 214 ஓட்டங்களைப பெற்றது. இதில் அசார் அலி 68 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் பிரெஸ்னன் 6 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு 144 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் ஆடிய இங்கிலாந்து அணி அப்துர் ரஹ்மானின் சுழற்பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் 72 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இதில் அணித் தலைவர் ஸ்ரோஸ் 32 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் அப்துர் ரஹ்மான் ஆறு, அஜ்மல் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இதன் மூலம் ஒரு போட்டி எஞ்சியுள்ள நிலையில் பாகிஸ்தான் அணி தொடரைக் கைப்பற்றியுள்ளது. போட்டியின் ஆட்டநாயகனாக அப்துர் ரஹ்மான் தெரிவானார்.

## நியூசிலாந்து இனிங்ஸ் வெற்றி



(நைபர்)

சிம்பாப்வே அணிக்கெதிரான ஒரு போட்டியைக் கொண்ட டெஸ்ட் தொடரை நியூசிலாந்து அணி வென்றுள்ளது.

இப்போட்டி நைபரில் நேற்று நிறைவடைந்தது. முதல் இனிங்ஸிற்காக ஆடிய நியூசிலாந்து அணி ஏழு விக்கெட்டுக்களை இழந்து 495 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்தியது. இதில் ரெய்லர் 122, வெற்லிங் 102 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிய சிம்பாப்வே அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 51 ஓட்டங்களைப் பெற்றது.

444 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய சிம்பாப்வே அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 143 ஓட்டங்களைப் பெற்றது. இதன் மூலம் இனிங்ஸ் மற்றும் 301 ஓட்டங்களால் நியூசிலாந்து அணி வெற்றிபெற்றது. இரு இனிங்ஸிலும் எட்டு விக்கெட்டுக்களை வீழ்த்திய மாட்டின் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

## அசரென்கா சம்பியன்



(மெல்பேர்ன்)


அவுஸ்ரேலிய பகிரங்க ரென்னிஸ் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவு சம்பியன் பட்டத்தினை பெலாரஸின் விக்டோரியா அசரென்கா வெற்றிகொண்டார்.

நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் மரியா ஷரபோவாவை சந்தித்த அசரென்கா 6-3, 6-0 என்ற நேர் செட்டில் வெற்றிகொண்டு இந்த வருடத்திற்கான முதலாவது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தினை பெற்றுக்கொண்டார்.

இவருக்கு Daphne Akhurst ஞாபகார்த்த கிண்ணமும், 2.3 மில்லியன் அமெரிக்க டொலர்களும் பரிசாக வழங்கப்பட்டது.



அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடரின் மகளிருக்கான இரட்டையர் பிரிவு இறுதிப் போட்டியில் ரஷ்யாவின் சுவனரேவா, கஸ்னட்சோவா ஜோடி, இத்தாலியின் சாரா எரானி, ராபர்டா வின்சி ஜோடியை வீழ்த்தி கிண்ணத்தைக் கைப்பற்றியது. கிண்ணத்துடன் வெற்றி ஜோடி நிற்பதைக் காணலாம்.



அவுஸ்ரேலியாவில் நடைபெறவுள்ள முத்தரப்பு ஒரு நாள் போட்டித் தொடருக்கு இலங்கை அணி நேற்று முன்தினம் பயணமானது. அவுஸ்ரேலியா செல்வதற்கு முன்னர் சமய வழிபாடுகளில் இலங்கை வீரர்கள் ஈடுபடுவதைக் காணலாம்.

## ரணதுங்க அதிருப்தி

இலங்கை அணியின் பயிற்றுநராக இருந்த ஜொவ் மார்ஷை அகௌரவமான முறையில் இலங்கை நீக்கியதாக இலங்கை அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்க விமர்சித்துள்ளார்.

மார்ஷ் போன்ற தொழில்வாண்மையாளர்களை நீக்குவதில் இலங்கை கிரிக்கெட் செயற்பட்டவிதம் அவமானகரமானதாகும். மார்ஷை நீக்கியமை இலங்கையின் தேசிய கிரிக்கெட் அணியுடன் இணைந்து செயற்படும் அல்லது செயற்பட திட்டமிட்டுள்ள தொழில்சார் உத்தியோகஸ்தர்களுக்கும் தவறான சமிக்ஞையை அளிக்கிறது. எதிர்காலத்தில் முன்னிலை பயிற்றுநர்கள், உடற்கூற்று மருத்துவர்கள் இலங்கையிடமிருந்து பதவிகளை ஏற்றுக்கொள்வதற்கு முன் இரு தடவை சிந்திப்பார்கள். எனத் தெரிவித்துள்ளார்.

## தொடரை முழுமையாக வென்றது ஆஸி.



(அடிலெய்ட்)

இந்திய அணிக்கெதிரான நான்கு டெஸ்ட் போட்டிகளைக் கொண்ட தொடரை அவுஸ்ரேலிய அணி முழுமையாகக் கைப்பற்றிக்கொண்டது.

அடிலெய்ட்டில் நேற்று நிறைவடைந்த நான்காவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலிய அணி 298 ஓட்டங்களால் அபார வெற்றியீட்டியது.

500 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கி தனது இரண்டாம் இன்னிங்ஸிற்காக ஆடிய இந்திய அணி இறுதி நாளான நேற்று சகல விக்கெட்டுகளையும் இழந்து 201 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது. இதில் விரேந்தர் சேவாக் 62, வி.வி.எஸ். லக்ஸ்மன் 35 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நெதன் லியோன் நான்கு, ரெயான் ஹரிஸ் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இந்தப் போட்டியில் இந்திய அணி அதன் முதல் இன்னிங்ஸில் 272 ஓட்டங்களைப் பெற்றதுடன், அவுஸ்ரேலியா 7 விக்கெட் இழப்பிற்கு 604 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக பீற்றர் சிடில் தெரிவு செய்யப்பட்ட அதே வேளை, தொடரின் சிறப்பாட்டக்காரராக அவுஸ்ரேலிய அணித் தலைவர் மைக்கல் கிளார்க் தெரிவானார்.

## ஓய்வாம் உண்மையா?

அவுஸ்ரேலிய டெஸ்ட் தொடரில் மோசமாக விளையாடிய 39 வயதான ராகுல் ராவிட் தனது ஓய்வு குறித்த அறிவிப்பை விரைவில் வெளியிடுவார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. சுவர் என்று அழைக்கப்படும் 39 வயதான ராவிட் இந்த அவுஸ்ரேலிய தொடரில் வெறும் 194 ஓட்டங்களே (சராசரி 24.25) எடுத்தார். கடைசி டெஸ்டிலும் ஓட்டம் குவிக்க தவறிய அவர், டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்தும் ஓய்வு பெற முடிவு செய்துள்ளதாக சக வீரர்களிடம் கூறியுள்ளார். ராவிட் ஏற்கனவே ஒரு நாள் போட்டி மற்றும் 20 ஓவர் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றமை குறிப்பிடத்தக்கது.



# நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி

# மகா கும்பாபிஷேகப் பெருஞ்

## நல்லை ஆதீன முதல்வரின் அருளுரை




அருள்மிகு நயினாதீவு நாகபூசணி அம்பாளுக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மனமகிழ்ச்சியடைகின்றோம். இலங்கையில் புகழ்பூத்த ஆலயங்களில் இவ்வாலயமும் ஒன்றாகும். இவ்வாலயம் மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கே இணைந்த ஆலயமாக விளங்குகின்றது. தான் தோன்றியாகவே (சுயம்புலிங்கமாக) மூலஸ்தானத்தில் அம்பிகை எழுந்தருளியிருப்பது இவ்வாலயத்துக்குத் தனியான ஒரு சிறப்பம்சமாகும். உலகத்துக்குத் தாயாகிய அன்னை பல சக்தி பீடங்களில் அமர்ந்திருக்கின்றாள். இங்கே புவனேஸ்வரி பீடமாக அமர்ந்து அருள்பாலிப்பது அனைத்து ஜீவராசிகளுக்கும் பெரும்நிலையாக அமைந்துள்ளது.

இத்தகு பெருமைமிக்க ஆலய மகா கும்பாபிஷேகப் பெருவிழா நவதளங்களைக் கொண்ட மகா இராஜகோபும் அமைக்கப்பட்டு ஆலயச் சூழல் திருப்பணிகளால் நிறைந்திருக்கின்றது. இன்றையதினம் நடைபெறும் மகா கும்பாபிஷேகத்தைக் கண்ணாரக் காணும் அடியார்களுக்கும் நிறைவேற்றிவைக்கும் சிவாச்சாரியார்களுக்கும், ஆலய அறங்காவலர்களுக்கும் நயினையம்பதி வாழும் மக்களுக்கும் அம்பிகையின் அருளை வேண்டி ஆசிகளைக் கூறிக்கொண்டு மகிழ்கின்றேன்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர்,
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்.

## நலம் பெருக்கும் ஸ்ரீ நாகபூசணி அம்பாளின் குடநீராட்டு விழா



கோவிலில்லா ஊர், நீரில்லா குளத்தையும் நிலவில்லா வானத்தையும் போன்றதாகும். ஊருக்குப் பெருமை கோவில, கோவிலுக்குப் பெருமை ஊர்நலம், இவ்வகையில் நயினை ஸ்ரீ நாகபூசணி அம்பாளின் திருத்தலம் ஈழமணித் திருநாட்டிலே தீவகத்தில் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற முத்திறச் சிறப்புக்களோடு விளங்குவது மட்டுமல்லாமல் வேண்டுவார் வேண்டும் வரமீயும் தாயாக அன்னை எழுந்தருளி உறைந்தருள் செய்கின்றாள்.

2011 ஆம் ஆண்டில் அம்பாளின் திருக்கோவில் கலையம்சச் சிறப்புக்களோடு புனர்நிர்மாணம் செய்யப்பட்டு ஆலய முகப்பாக அதிசுந்தர நவதள நவகலச இராஜகோபுரம் அமைக்கப்பட்டு இன்று 33 குண்ட மஹாயாக பிரதிஷ்டா திருக்குட திருமஞ்சன பெருஞ்சாந்தி விழா மிகச்சிறப்பாக நடைபெறுகின்றது. ஸ்ரீ நாகபூசணி அம்பாளின் திருக்கோவிலில் விசாலமான பல திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டு குடநீராட்டு நடைபெறுகின்றது. இப்பெருஞ்சாந்தி விழாவைக்காண பல்லாயிரக்கணக்கான அம்பாளின் அடியவர்கள் நயினாதீவில் கலந்துகொள்ளும் பக்திமயமான காட்சியை இவ்வாண்டிலே தரிசிக்கின்றபேறு நமக்கெல்லாம் கிடைத்திருக்கின்றது. எல்லோருக்கும் அம்பிகையின் திருவருள் பெருக பிரார்த்திப்போமாக.

எனக்கென்றோர் தனிவரம் யான் கேட்கவில்லை
என் இனத்தார் வாழ்வென்றே கருதவில்லை
உனக் கெல்லா உயிர்களுமே சொந்தமென்ற
உண்மையை யான் ஒருபோதும் மறந்ததில்லை
சினங் கொண்டு தீங்கிழைக்குந் தீயர் தாமும்
சீலமுற வேண்டுமென்றே வேண்டுகின்றேன்
தனக்கொருவ ரொப்பில்லாத் தாயே! இந்தத்
தரணியில் சாந்தியையே தருவாய் நீயே!
தாயேஆகிவளர்த்தனை போற்றி!


ஆ. தியாகராசா, தலைவர், நயினாதீவு,
ஸ்ரீநாகபூசணி அம்மன் திருக்கோவில்.

## தேசம் விடியும் பாருங்கள்

அள்ளித் தருபவள் அம்பாள்
அவளுக்கே கும்பாபிஷேகம்,
தெள்ளித் தெளிக்கும்
தீர்த்தமதால்
தேசம் விடியும் பாருங்கள்!
கிள்ளித் தைத்த துன்பம் யாவும்
கோவிலில் இறங்க நீறாகும்!
வெள்ளி மின்னும் நயினை
அன்னையே
வில்லங்கம் இல்லா வரம்தா!

கே.எஸ்.சிவஞானராஜா,
கொக்குவில்

## வேலணைப் பிரதேச தவிசாளரின் வாழ்த்துச் செய்தி



அலைகடல் நடுவே அண்டிவரும் அடியார்களுக்கு அருள்பாலித்து அபயம் அளித்து வருகின்ற வரலாற்றுப் பெருமைமிக்க நயினாதீவு நாகபூசணி அம்மனுக்கு இன்று கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். வேண்டும் வரங்களை வேண்டுவோர்க்கு ஈந்தருளும் அற்புத தெய்வமாகிய அம்பாளுக்கு வானுயர்ந்த இராஜகோபுரமும் அழகிய சிற்பப்பாடுகளமைந்த கோபுர கலச கும்பாபிஷேகத் இத்திருநாளில் அனைத்து மக்களும் சகல செல்வங்களும் பெற்று மகிழ்ச்சியுடன் சாந்தி, சமாதானத்துடன் வாழ இப்புண்ணிய திருநாளில் அனைவரையும் வாழ்த்துகின்றேன்.

சி. சிவராசா, தவிசாளர், வேலணைப் பிரதேச சபை.

## ஆலய செயலாளரின் வாழ்த்து

மணித்தீவு மணிபல்லவம் என்று போற்றப்படுவதும், நாற்புறமும் கடல் சூழ்ந்து ஆர்ப்பரிக்கின்ற புண்ணிய பூமியிலே துயில் கொள்கின்ற மக்கள் கூட்டத்தைக் காத்து இரட்சிக்கின்ற தெய்வமாக அறுபத்திநான்கு சக்தி பீடத்திலே ஒன்றான புவனேஸ்வரி பீடம் எனப் போற்றப்படும் நயினை நாகபூசணி அம்பிகையின் கும்பாபிஷேக சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமையடைகின்றேன். அழகிய சிற்ப சித்திர வேலைப்பாடுகள் நிறைந்த ஆலயத்தின் தோற்றத்தைக் காண்கின்ற பேறுபெற்ற நாம் உண்மையிலே பலன் செய்தவர்கள்.

வான் உயர் கோபுரம் வா என அழைத்ததம்மா
வந்ததும் நந்தியின் உருவத்தில் மயங்கி நின்றேன்.
வேப்பமரத்தின்பச் சோலையிலே மூழ்கி
தீர்த்தக்கேணியில் கயிலையின் காட்சி கண்டேன்
மறுகணம் என்கண்களை விழித்திடவே
கலைபொழில் ஆலயத்தோற்றம் கண்டேன்
புருஷோத்மன் கைகளில் தவழக்கண்டேன்
அடியாருடன் நானும் வலம் வந்து உள்
வீதியின் அழகிய தூண்களின் தோற்றம் கண்டேன் (வான் உயர்...)

இவ்வாறு பிரசித்தி பெற்று இன்று கும்பாபிஷேகம் காண்கின்ற அன்னை நாகபூசணி அம்பிகையானவள் அனைவருக்கும் அருள் வழங்கவேண்டும் என எனது இருகரம் கூப்பி வேண்டி இம் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்கி நிற்கின்றேன்.

ந. மோகனரூபன், செயலாளர், நயினை நாகபூசணி அம்மன் கோவில் அறங்காவலர் சபை.

## அம்பிகையே குடமுழுக்கு ஆடீரம்மா!

ஈழமணித் திருநாட்டின் இதயமாக
இலங்குமெழில் யாழ்ப்பாண நகரின் மேற்கே
சூழவரும் எழுதீவின் சிகரமாக
தொல்புகழால் வளஞ்சேரும் நயினாதீவில்
வாழவழி காட்டுகின்ற தெய்வமாக
வன்னிமரச் சோலையிலே அருள்சுரக்கும்
ஆழிமிசை அருள் பொழியும் அம்பிகையே
அகங்குளிரக் குடமுழுக்கு ஆடீரம்மா!
கண்கவருங் கலையரங்கும் கயிலாயத்தில்
காட்சியொடு கங்கையிலே கலைமிளிர
விண்முட்டும் கோபுரமும் வித்தையோங்க
வீதியெல்லாம் அம்பிகை நின் கலைவடிவம்
தண்ணருளைத் தந்திடவே தரணியெங்கும்
சாந்தியினைத் தந்திடுவாய் தாயேயென்று
பண்ணிசைக்க வேதமந்திர கீதமோங்க
பார்வதியே குடமுழுக்கு ஆடீரம்மா!

கவிஞர் கா.பொ.இ. குலசிங்கம்,
அறங்காவலர்சபை உறுப்பினர்,
ஸ்ரீநாகபூசணி அம்மன் கோவில்,
நயினாதீவு.

## பிரதிஷ்டா பிரத[...]
## அரு[...]

வரலாற்றுச் சிறப்புமிக்க மி[...]
அருள்மிகு ஸ்ரீநாகபூசணி அம்பா[...]
புராணங்களில் இது மணிபல்ல[...]
இங்கு நாகர் வசித்ததாக வரலா[...]
கில் ஒன்றான புவனேஸ்வரி பீ[...]
கிறது. இப்பீடத்தில் எழுந்தருளி[...]
யிரம் வருடங்களாக நாகர்களின[...]
வந்தது.

சர்வான் மாக்கட்டும், வேண்[...]
வாகிய ஸ்ரீ நாகபூசணி அம்பாளி[...]
கப் புனரமைக்கப்பட்டிருக்கிறது.[...]
மிகச்சிறப்பாக அமைக்கப்படடிருக்[...]
காட்சி, கலாமண்டபம் போன்ற[...]
றைய புதினமான தைத்திருநாளி[...]
சகித புனராவர்த்தன அஷ்டபருத[...]
யாக பிரதிஷ்டா தி[...]ட திரு[...]

இப்பெருஞ்சாந்தி நிகழ்வை[...]
ளியிருக்கிறாள். எல்லாம் அ[...]
அவளருளின்றி அவனியில் எ[...]
மகா கும்பாபிஷேகப் பெருவிழா[...]
ளும், ஆசியும் நிறைவோடு கி[...]
விந்தங்களை மெய்யன்போடு வ[...]

பிரதிஷ்டா பிரதம சிவாச்[...]
சிவாகம குவாகர[...]
முத்துக்குமாரசாமி சிவாச்ச[...]

## தாயின் கோவில் திரு[...]
## எனக்குக் கி[...]

வரலாற்றுச் சிறப்பும் அற்புத[...]
அம்மன் திருத்தலமாகும். மணிப[...]
இதற்கு உண்டு. தன்னை நாடி[...]
கரம் காட்டி நிற்பவள் நாகபூச[...]
தமிழகத்திலே அமைந்து சி[...]
விளங்குகின்றது. பழம்பெருமை[...]
வேற்றுகின்ற பொறுப்[...] அம்பா[...]
வினருடன் இணைந்[...] அம்பாளி[...]
ரத்தையும் கலையம்சத்துடன் அ[...]
பொழுதாக அமைந்திருக்கின்றது[...]
அழகம்சம் மிக்க திருப்பணி வே[...]
வேளையில் தாய் அதைவிடப் ப[...]
பெருக்க துணை செய்கின்றாள்[...]
என் செயல் எதுவுமில்லை. அந்த[...]
சபையினர், அம்பாளின் அடியவ[...]
குறிப்பிட்ட காலப்பகுதியினுள்[...]
தள மகா இராஜகோபுர அமைப்[...]
நின்று அல்லும் பகலும் உதவி[...]
குழுவினருக்கும் எல்லாம்வல்ல[...]
கிடைக்க வேண்டுமென தாயவ[...]

## ஈழத்து நயினையில் குடநீராட்டு காண வாரீர்

மணி பல்லவ நாயகியின் மகத்துவம் பேசிடும் கோபுரம் காணவாரீர்
மன்னர்கள் காலத்து கட்டிடச் சிறப்பினைப் பார்த்திட வாரீர்
பணி செய் தொண்டரின் பக்குவ உணர்வினை பகிர்ந்திட வாரீர்
பரந்தெழும் சமுத்திரம் ஓதிடும் வாழ்த்தினைக் கேட்டிட வாரீர்
பிணி தீர்த்தருளும் பிராட்டி திருக்கோவில் அழகினைப் பார்த்திட வாரீர்
பேசாத பொருளெல்லாம் பேசிடும் திறனினைக் கண்டிட வாரீர்
அணியணியாக அடியார்கள் எல்லோரும் அன்னையின் குடநீராட்டு காண வாரீர்
அன்பர்கள் குறைதீர்க்கும் அன்னபூரணியின் மகிமைகள் காண வாரீர்

சப்த தீவுகளின் சரித்திரமாயெழுந்த நவதள கோபுரம் காண வாரீர்
சர்ப்பம் பூஜித்த நாயகியின் சரித்திர முரைத்திட வாரீர்
அற்புதமாய் சிற்பங்கள் பேசிடும் சிறப்பினைக் காண வாரீர்
ஐந்தலை நாகத்துள் அருள்பவள் அருளினைக் வியந்திட வாரீர்
நற்பெரும் சக்தி பீடமாயெழுந்த நயினை நகருக்கு வாரீர்
நமக்கொரு விடிவினைப் படைத்திடும் தாயின் திருவடிதொழ வாரீர்
இப்பெரும் மகா கும்பாபிஷேகம் காணாத கண்ணென்ன கண்ணே
ஈழத்து நயினைக்கு எழுந்தின்று குடநீராட்டு காண வாரீர்.

வர்ணனைக் கலாநிதி,
மதுரகவி, காரை. எம்.பி. அருளானந்தன் (J.P)
பணிப்பாளர், சைவத்தமிழ் பண்பாட்டுக் கழகம்.


ஹற்றன் நஷனல் வங்கி
சிறந்த சேவையின் அடையாளம்
முகாமையாளர்,
உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள்
குறிகாட்டுவான் வீதி, வேலணை.
(C/1256)

SKR Communication & Book Center
அனைத்து பாடசாலை உபகரணங்களும் மற்றும் போட்டோப் பிரதிகளும் செய்து பெற்றுக்கொள்ளலாம்.
குறிகாட்டுவான் வீதி,
வங்களாவடி, வேலணை.
(C/1257)

கும்பா[...]

புலேந்திரன[...]
இந்திரகுமா[...]
குடும்பத்தினர்
வேலணை கிழக்கு[...]
4ஆம் வட்டாரம்.
(C/1258)

அம்பாள் வர்த்தக வாணிப நிலையம்
அனைத்துப் பொருட்களும்
மலிவான விலையில்...
குறிகாட்டுவான் வீதி,
வங்களாவடி, வேலணை.
(C/1263)

நாஹா ரெக்ஸ்
தரமான உடு புடைவைகள்
மலிவான விலையில்...
குறிகாட்டுவான் வீதி,
வங்களாவடி, வேலணை.
(C/1264)

திரு. ரவிகநாய[...]
தீவகம் தெற்கு கிரா[...]
கடற்றொழிலாளர் சமா[...]
தலைவர்.
துறையூர், 4ஆம் வட்டாரம்,
வேலணை.

மணிகண்டன் வர்த்தக நிலையம்
சகல பொருட்களும் மலிவான
விலையில்
வங்களாவடிச் சந்தி, வேலணை.
(C/1270)

றிக்கோ ஐஸ்சொக்
திருமண வீடுகள் மற்றும்
மகிழ்வான நிகழ்வுகளிற்கும்
புளிங்கூடல் வீதி, வேலணை.
(C/1272)

மயுறி பல்பொரு[...]
வாணிபம்
மற்றும் பாடசாலை[...]
கரணங்கள் விற்பனையா[...]
குறிகாட்டுவான் வீதி, வேல[...]
துறையூர்.

# ணி அம்மன் திருக்கோவில்

# ருஞ்சாந்தி விழா சிறப்பு மலர் - 2012





## டா பிரதம சிவாச்சாரியாரின் அருளாசியுரை



சிறப்புமிக்க மிகப் பெரிய திருக்கோயிலான பூசணி அம்பாள் ஆலயம் பண்டைய இதிகாச ந்து மணிபல்லவமென வழங்கி வருகின்றது. த்ததாக வரலாறு. சக்தி பீடம் அறுபத்தினான் வனேஸ்வரி பீடமாக அமைந்து காணப்படு ல் எழுந்தருளியிருக்கும் அன்னைக்குப் பல்லா க நாகர்களினாலே பூஜைகள் செய்யப்பட்டு

கட்டும், வேண்டுவார் வேண்டுவதை வாரி வழங்கும் ஜகன் மாதா சணி அம்பாளின் ஆலயம் தற்போது சிறந்ததொரு கலைக்கோவிலா பட்டிருக்கிறது. அத்துடன் அதிசுந்தர நவதள மஹா இராஜகோபுரம் மைக்கப்படடிருக்கிறது. ஆலயத் தெற்குப் பிரகாரத்தில் கைலைத் திருக் டபம் போன்ற திருப்பணிகள் செவ்வனே நிறைவேற்றப்பட்டு இன் தைத்திருநாளிலே அதிசுந்தர, நவகலச, நூதன மஹா இராஜகோபுர ன அஷ்டபருதன, உத்தமோத்தமத்ரயத்திரும்சத் (33) குண்ட மஹா தி...தட திரும...ன பெருஞ்சாந்தி விழா நிகழுகின்றது.

ந்தி நிகழ்வை நிறைவேற்றுகின்ற அருட்பணியை அன்னை எனக்கரு ல்லாம் அ...ளின் திருவருட் குறிப்பேயென்று தான் உரைக்கலாம். வனியில் எ...ும் நடைபெற முடியாது. இன்றையதினம் நடைபெறும் ப் பெருவிழா சிறப்பாக நடைபெற ஸ்ரீ நாகபூசணி அம்பாளின் திருவரு றைவோடு கிடைக்க வேண்டுமென அம்பிகையின் திருப்பாதார ய்யன்போடு வணங்கிப் பிரார்த்தித்து வாழ்த்தி வணங்குகின்றேன்.

**ரதம சிவாச்சாரியார், ஸாகித்ய சிரோன்மணி, வித்யா கல்பநிதி ாகம குவாகரன், நயினை குருமணி, சிவஸ்ரீ பரமசாமி குருமணி சாமி சிவாச்சாரியார், ஆதீன பிரதம சிவாச்சார்யார், நயினாதீவு**

**ஸ்ரீ நாகபூசணி அம்மன் திருக்கோயில்.**

## ாவில். திருப்பணி வேலைகளை நிறைவேற்ற ாக்குக் கிடைத்த தவப்பொழுது இது

றப்பும் அற்புதமான பழமையும் கொண்டது நயினாதீவு நாகபூசணி ாகும். மணிபல்லவம் என்று குறிப்பிடப்பட்ட இலக்கியச் சிறப்பும் ன்னை நாடி வரும் பக்த கோடிகளுக்கு அஞ்சேல் என்று அபய வள் நாகபூசணித் தாய்.

அமைந்து சிறப்புமிக்க ஆலயங்களுக்கொத்ததாக இவ்வாலயம் பழம்பெருமை வாய்ந்த இவ்வாலயத்தில் திருப்பணிகளை நிறை ...அம்பாள் எ...கு அருளியிருக்கின்றாள். எனது கலைக்குழு ந்து அம்பாளின் திருக்கோவிலையும் நவதள மகா இராஜகோபு ம்சத்துடன் அமைப்பதற்கு எனக்குக்கிடைத்த பொழுதுகள் தவப் திருக்கின்றது. அம்பாளுக்கு எப்படி எப்படி பூரணப் பொலிவோடு ருப்பணி வேலைகளை நிறைவேற்றலாம் என எண்ணியிருக்கின்ற அதைவிடப் பன்மடங்கு விசாலமான எழில் வண்ணச் சிறப்புகளைப் செய்கின்றாள் என்றே கூறலாம். அவளுடைய திருவருளேயன்றி யில்லை. அந்த வகையில் ஆலயச் சிவாச்சார்யார்கள், அறங்காவலர் ளின் அடியவர்கள் எல்லோரினது பூரணமான ஒத்துழைப்பினால் பகுதியினுள் ஆலயப் புனர்நிர்மாணப் பணிகளையும் புதிய நவ காபுர அமைப்புப் பணிகளை நிறைவேற்ற முடிந்தது. இப்பணியில் களும் உதவிய அத்தனை நல்லுள்ளங்களுக்கும் எனது கலைக் எல்லாம்வல்ல நயினை நாகபூசணி அம்பாளின் அருட்கடாச்சம் மென தாயவளின் பாதக்கமலங்களைப் பணிந்து நிற்கின்றேன.

**கலியபெருமாள் - புருஷோத்தமன் ஸ்தபதி,**
**கொல்லிடம் - சீர்காழி - தமிழ்நாடு.**


## பாபிஷேகப் பெருவிழா சிறப்புற வாழ்த்துவோர்

**ந்திரன் ரெகுமாரி**
பத்தினர்
ண கிழக்கு
வட்டாரம்.

**கண்ணன் பேக்ஹவுஸ்**
சிறந்த பாண், கேக், பணிஸ், கறிபணிஸ் போன்வற்றை சில்லறையாகவும் மொத்தமாகவும் பெற்றுக் கொள்ளலாம்
குறிகாட்டுவான் வீதி, வேலணை.
(C/1259)

**வேலணை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய பரிபாலன சபை**
தலைவர் மற்றும் உறுப்பினர்கள், பக்தர்கள்.
(C/1260)

**ரூபன் ஹாட்வெயார்ஸ்**
கிருமிநாசினி, மருந்து வகைகள, உர வகைகளைப் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்.
வங்களாவடிச் சந்தி, வேலணை.
(C/1261)

**வேலணை சமுர்த்திச் சங்கம்**
**சிறந்த சேவையாற்றிவரும்**
முகாமையாளர்,
உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள்.
வேலணை.
(C/1262)

**கநாயகம்**
ற்கு கிராமிய
ாளர் சமாசத்தின்
லவர்.
வட்டாரம்,
(C/1265)

**ஸ்ரீ அருள் வரதகாளி அம்பாள்**
நிர்வாகத்தினரும், பக்தர்களும்
குறிகாட்டுவான் வீதி, வேலணை, துறையூர்.
(C/1267)

**கலைவாணி கல்வி நிலையம்**
தரம் 1 - O\L வரை
தரமான ஆசிரியர் குழாமின் ஒருங்கிணைந்த சேவை
குறிகாட்டுவான் வீதி, வேலணை.
(C/1268)

**ஜீவா உணவகம்**
சுத்தமான சைவ உணவகம்
ஓடரும் ஏற்றுக்கொள்ளப்படும்.
குறிகாட்டுவான் வீதி,
வங்களாவடிச் சந்தி, வேலணை.
(C/1269)

**தவிசாளர், செயலாளர், உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.**
பிரதேசசபை உப அலுவலகம் - நயினாதீவு
பிரதேசசபை உப அலுவலகம் - புங்குடுதீவு
பிரதேசசபை உப அலுவலகம் - வேலணை
பிரதேசசபை உப அலுவலகம் - அல்லைப்பிட்டி
பிரதேசசபை உப அலுவலகம் - மண்டைதீவு
(C/1271)

**ல்பொருள் ணிபம்**
டசாலை உப
ற்பனையாளர்கள்
வீதி, வேலணை,
(C/1273)

**பாம் கோப் சிற்றி**
பனைசார் உற்பத்திப் பொருட்களை மலிவான விலையில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்.
பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம், வேலணை.
(C/1274)

**மணி போட்டோ மற்றும் நொக்கியா**
நிறுவனத்தின் விற்பனையாளர்களும், நெற்வேக் மற்றும் போட்டோக கொப்பி, பக்ஸ் வசதிகள் கொண்ட ஒரேநிறுவனம். இன்றே நாடுங்கள்.
வங்களாவடி, வேலணை.
(C/1275)

**ஸ்ரீ முருகன் ரெக்ஸ் பல்பொருள் வாணிபம்**
வங்களாவடிச் சந்தி, வேலணை.
(C/1266)



# சம்பந்தப் பெருமானும் சரவணப் பொய்யரும்!

-மொழிவரதன்-

(வானவில் 13-01-2012 திகதிய இதழிலிருந்து)


'தமிழ் சிவில்' சமூகம் என்ற பெயரில் சிலர் ஒன்றுசேர்ந்து தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு அனுப்பிய புலிகளின் பாணியிலான கடிதத்திற்கு, கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் பதில் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அவருடைய கடிதத்தில் கூறப்பட்டுள்ள சில விடயங்களை வைத்துப் பார்க்கையில், அக்கடிதத்தின் நம்பகத் தன்மையே கேள்விக்குறியாகின்றது. சம்பந்தனின் பதில் கடிதப்படி, அந்த மகஜரில் ஏராளமானோரின் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தும், அவர்கள் எவரினதும் கையெழுத்துகள் அதில் இருக்கவில்லை.

அடுத்த விடயம், அதில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர்களில் பெரும் பாலோர் மக்களுக்குத் துளியும் பரிச்சயமில்லாத அநாமதேயங்கள். அதிலும்கூட பலர் தங்களுக்கும் அதில் கூறப்பட்டுள்ள விடயங்களுக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை எனக் கூறியதாகப் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. அப்படியானால் இது ஒரு மோசடிக் கடிதமா? இந்தக் கூறப்படும் கடிதத்தில் முதலாவது பெயராக மன்னார் ஆயர் வணக்கத்துக்குரிய இராயப்பு யோசப்பு அவர்களின் பெயர் உள்ளது. அப்படியானால் அவரும் இந்த அநாமதேயக் கடிதத்தில் சம்பந்தப்பட்டுள்ளாரா? ஏற்கெனவே அவர் புலிகளின் காலத்தில் எடுத்த நிலைப்பாடுகள், விடுத்த அறிக்கைகள் காரணமாக, 'வெள்ளை அங்கி தரித்த புலி' என சில தரப்புகளால் குற்றம் சாட்டப்பட்ட நிலையில், இந்தக் கடிதம் அவரை மீண்டும் சர்ச்சையில் சிக்க வைத்துள்ளது.

இதில் கவனிக்க வேண்டிய இன்னொரு விடயம், அரசுக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் நடைபெற்றுவரும் இனப்பிரச்சினை சம்பந்தமான பேச்சுவார்த்தைகளை எப்படியும் குழப்பிவிட வேண்டும் என்பதில், கூட்டமைப்பின் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் (சிறிதரன், சரவணபவன், அரியநேத்திரன்) உட்பட சில சக்திகள் பகீரதப் பிரயத்தனம் செய்து வருகின்றன.

இந்த முயற்சிகளுக்கு இல்லாத பொல்லாத பொய்ச் செய்திகளையெல்லாம் இட்டுக்கட்டி, யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் கூட்டமைப்பின் உத்தியோகப் பத்திரிகை களமமைத்துக் கொடுத்து வருகின்றது. இதன் மூலம் அரசின் மீது அவநம்பிக்கையை ஏற்படுத்தி, தமிழ் மக்களைத் தொடர்ந்தும் அரச எதிர்ப்பு நிலையில் வைத்திருந்து, அவர்களுக்கு எதுவுமே கிடைக்காமல் பார்த்துக் கொள்வதுதான் அப்பத்திரிகையின் நோக்கம்.



கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரான சரவணபவனுக்குச் சொந்தமான அந்தப் பத்திரிகை இத்தகைய விசமத்தனங்களில் ஈடுபட்டாலும், கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தமிழ் சிவில் சமூகத்தின் கடிதத்துக்கு அனுப்பி வைத்துள்ள பதிலில் இவ்வாறு கூறியிருக்கிறார்: "அரசாங்கத்திற்கும் எமக்கும் இடையிலான பேச்சுவார்த்தையில் இடம்பெறும் எல்லா விடயங்களையும் பொதுமக்களிற்கு வெளியிடுவது சாத்தியமற்றதாகும். எனினும் ஏற்றுக் கொள்ளக்கூடியதும் நடைமுறைச் சாத்தியமானதும் நிலையானதும் பெரும்பான்மையான எமது மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றக் கூடியது மான அரசியல் தீர்வை நோக்கியதாக எமது பேச்சுவார்த்தை கட்டமைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகிறேன்"


சம்பந்தனின் இந்தக் கூற்று சொல்வது என்ன? சரவணபவனின் உதயன் பத்திரிகை சொல்வதற்கு மாறாக, அரசுடனான பேச்சுவார்த்தை ஆரோக்கியமான திசை வழியில் பயணிக்கிறது என்பதையல்லவா? அப்படியானால் சரவணபவன் தலைவர் சம்பந்தனின் கூற்றுக்கு எதிராக விசமத்தனம் செய்வதும், அவர் மீது கூட்டமைப்பு நடவடிக்கை ஏதும் எடுக்காதிருப்பதும் ஏன்? இது மட்டுமல்ல, கூட்டமைப்பின் இன்னொரு நாடாளுமன்ற உறுப்பினரான எம்.ஏ.சுமந்திரன் அரசாங்க பாராளுமன்ற உறுப்பினர் களுடன் நட்பின் நிமித்தம் கிரிக்கெட் விளையாடியது பற்றி வாசகர்களிடம் அபிப்பிராயம் கேட்பது என்ற போர்வையில், சுமந்திரனுக்கு எதிரான கருத்தை உதயன் உருவாக்கி வருகிறது. சரவணபவனின் இந்தக் கபடத்தனமான, கட்டுப்பாடற்ற போக்கை, கூட்டமைப்புத் தலைமை தடுத்து நிறுத்த வக்கற்றுப் போய் விட்டதா என்ற கேள்வியும், அதன் ஆதரவாளர்கள் மத்தியில் எழுந்துள்ளது.

பத்திரிகை என்ற சர்வ வல்லமையுள்ள ஊடக ஆயுதத்தை வைத்துக் கொண்டு, சரவணபவன் தமிழ் கூட்டமைப்பையே தனது கைக்குள் போட எடுக்கும் முயற்சியை, அதன் தலைமை எத்தனை நாளைக்கு வேடிக்கை பார்க்கப் போகிறதோ தெரியவில்லை.

# சிரித்தால் மட்டும் போதுமா?

சார்லி சாப்ளின் லைம் லைட்ஸ் என்றொரு படம் இயக்கியிருந்தார். அது வயதான காலத்தில் ஒரு கோமாளி கொள்ளும் மனவேதனைகளை பற்றியது. கோமாளிக்கு கண்ணாடியில் தன் உருவத்தை பார்க்கும் போது கடந்தகால கைதட்டல்கள் காதில் விழும்.

லைம் லைட்ஸ் படத்தில் ஹொலிவூட்டின் இன்னொரு பிரபலமான நகைச்சுவை நடிகர் பஸ்டர் கீட்டன் நடித்திருப்பார். கீட்டனும் இப்படம் நடித்த காலத்தில் புறக்கணிப்பிலும் தனிமையிலும் தான் வாழ்ந்து கொண்டிருந்தார். இந்த படம் கோமாளியின் அந்தரங்க வலிகளை சிறப்பாக வெளிப்படுத்தியது. சிரிப்பின் பின்னே ஒளிந்திருக்கும் அழுகையை அடையாளம் காட்டியது.



உலகெங்கும் நகைச்சுவை நடிகர்கள் மக்களை சிரிக்க வைக்கிறார்கள். ஆனால் அவர்களது சொந்த வாழ்க்கை சிக்கலும் பிரச்சினைகளும் வலியும் தனிமையும் நிரம்பியதாகவே இருந்திருக்கிறது. அதற்கு நிறைய உதாரணங்கள் இருக்கின்றன.

குழந்தைகளின் கனவு நட்சத்திரமான சாப்ளினுக்கு சிறுவர்களையே பிடிக்காது. சொந்தப் பிள்ளைகளை கூட வெறுத்தார், மனைவியை விவகாரத்து செய்தார். உடன் வேலை செய்பவர்களை மோசமாக நடத்தினார் என்று எண்ணிக்கையற்ற புகார்கள். தமிழில் என்.எஸ்.கிருஷ்ணன், சந்திரபாபு போன்றவர்களின் தனிப்பட்ட வாழ்க்கையும் துயர் நிரம்பியதே.

உலகையே சிரிக்க வைப்பவன் மனம் நிரம்பிய வேதனையில் இருப்பது ஒருவகையில் சாபம் போலும். நாகேஷ் வாழ்க்கையும் அப்படிதானிருந்தது.

நாகேஷ் ஷூட்டிங்கிற்கு வருவதற்காக எம்.ஜி.ஆர். சிவாஜி எல்லாம் காத்துக்கொண்டு இருந்திருக்கிறார்கள். அப்படித்தானிருந்தது நாகேஷின் காலம். அவர் நகைச்சுவையில் கொடி கட்டி பறந்த நாட்களில் ஓய்வின்றி நடித்திருக்கிறார். மக்கள் திரையில் நாகேஷை பார்த்த நிமிடம் சிரித்திருக்கிறார்கள்.

இன்று பல நகைச்சுவை நடிகர்களை குரலால் பாவனை செய்துவிட முடியும். மிமிக்ரி செய்பவர்கள் அதை சாதித்துக் காட்டுகிறார்கள். நாகேஷை அப்படி மிமிக்ரி செய்பவர்களை நான் கண்டதேயில்லை. காரணம் நாகேஷை குரலால் மட்டும் பாவனை செய்துவிட முடியாது. நாகேஷாக பாவனை செய்ய நாகேஷாகவே மாறவேண்டும், உடல்மொழி வேண்டும், வேறு வழியேயில்லை.

எல்லா அரிய விஷயங்களையும் காலம் ஒரு நாள் கண்டுகொள்ளாமல் விட்டுப் போய்விடுகிறது. அது பெரும்பான்மை திரை நட்சத்திரங்களுக்கு அவர்கள் கண்முன்னே நடந்துவிடுகிறது. புறக்கணிப்புதான் அவர்களின் மிகப்பெரிய வலி.

தமிழ் சினிமாவில் தனித்த ஆளுமையாக இருந்த போதும் நாகேஷ் தேசிய அளவிலான எந்த அரசு அங்கீகாரமும் கிடைக்காமல் போன கலைஞனே.

அவரது நகைச்சுவை இயல்பானது. அது நினைத்து நினைத்து சிரிக்க கூடியது. அடுத்தவரை புண்படுத்தாதது. துளியும் ஆபாசமற்றது. அவரது நகைச்சுவைக்கு நம் மரபில் நீண்ட தொடர்ச்சியிருக்கிறது. தெருக்கூத்தில் வரும் கட்டியக்காரன். நாடகமேடையில் வரும் பபூன் என்று நமக்கான மரபிலிருந்த உடல் மொழியும் பகிடியும் அவர் சரியாக உள்வாங்கியிருந்தார். அதே நேரம் அவர் சாப்ளினை, ஜெரி லூயிசை போல தன் உடலை நகைச்சுவையின் வெளியீட்டு வடிவமாக்கி கொண்டிருந்தார்



வேகம் தான் அவரது நகைச்சுவையின் பிரதான அம்சம். நடந்து செல்வதாகட்டும். துள்ளி விழுவது ஆகட்டும் எதிலும் மிகுவேகம் கொண்டிருந்தார். அதே நேரம் குணசித்திர வேஷங்களில் நடிக்கும் போது தனது வழக்கமான நடிப்பு வந்துவிடாமல் கவனமாக விலகி, ஆழமாகவும் மிகையின்றியும் தன்னை வெளிப்படுத்திக் கொண்ட சிறந்த நடிகர்.

சிரிப்பின் உச்சம் அழுகையில் முடியும் என்பார்கள். தனது துயரங்களுக்கான அழுகையை சிரிப்பாக மாற்ற தெரிந்தவனே உயர் கலைஞன். நாகேஷ் அதற்கொரு தனி அடையாளம்.

-எஸ்.ராமகிருஷ்ணன-

## பாட்டுக் கேட்டு ஆடும் ரோபோ



உலகின் மிகப் பிரமாண்டமான வீட்டு உபயோகப் பொருட்களின் கண்காட்சி அமெரிக்காவின் லாஸ் வேகாஸ் நகரில் நடைபெற்றது. இதில் உலகம் முழுவதிலும் இருந்து 3,000க்கும் அதிகமான நிறுவனங்கள் தங்களது கண்டுபிடிப்புகளை அறிமுகம் செய்தன. இதில் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது எம் ரோபோ அல்ட்ரா பொஸ் என்ற ரோபோ தான். இந்த ரோபோ வியட்னாமைச் சேர்ந்த டோஸி ரோபோடிக்ஸ நிறுவனத்தின் புத்தம் புதிய கண்டுபிடிப்பாகும். இந்த ரோபோவில் ஸ்பீக்கர் இணைக்கப்பட்டுள்ளது. பாட்டு கேட்டபடியே ரோபோநடனமாடவும் செய்கிறது.

## தெரிந்து கொள்வோம்!



* வயலின் என்றும் பிடில் என்றும் அழைக்கப்படும் மேலைநாட்டு இசைக்கருவி, பழந்தமிழ் இலக்கியத்தில் 'கின்னரி' என்று குறிக்கப்பட்டுள்ளது. இந்த பிடிலை, கர்நாடக இசைக்கும் துணைக்கருவியாக மாற்றம் செய்து அமைத்துத் தந்தவர் வித்துவான் வடிவேலுப்பிள்ளை. அவர் தஞ்சை அரண்மனை இசைப் புலவராக விளங்கியவர்.

* இசைத்தமிழ் பற்றிய ஓர் ஆய்வு நூல் 'யாழ் நூல்'. இதனை விபுலானந்த அடிகளார் எழுதியுள்ளார். 1947-ல் கரந்தைத் தமிழ்ச்சங்கம் அதனை வெளியிட்டது. இந்த நூல் பாயிரவியல், யாழ் உறுப்பியல், இசை நரம்பியல், பாலை திரிபியல், பண்ணியல், தேவாரவியல், ஒழிபியல் என ஏழு பகுதிகளைக் கொண்டுள்ளது. பல்வேறு வகையான யாழ்களையும், யாழ் உறுப்புகளையும் பற்றி இந்நூல் விரிவாகக் கூறுகிறது.

## ஓவியம் வரைய புதிய மென்பொருள்



கணனியில் ஓவியம் வரைவதற்கு பல்வேறு மென்பொருள்கள் உள்ளன. ஆனால் ஓவியம் வரைவதற்கென்றே பிரத்யோகமாக கிடைக்கக்கூடிய மென்பொருள்களில் ஒன்று ஸ்மூத் ட்ரோ (Smooth Draw) ஆகும். 'இந்த மென்பொருள் இலவசமாக கிடைக்கின்றது. இதனை பதிவிறக்கம் செய்து கணணியில் நிறுவிக் கொள்ளவும். இதில் பேனா, பென்சில், வோட்டர் கலர், எயர் ஸ்பிரே எனப் பல்வேறு விதமான பிரஸ்கள் கொடுக்கப்பட்டுள்ளன. போட்டோஷொப் போன்ற முன்னணி மென்பொருள்களில் உள்ள பிளர், ஷார்ப்னர், பேர்ன், ஸ்மட்ஜ் டூல்களும் லேயர் வசதியும் இதில் உள்ளது. எளிய தோற்றமும், எவரும் புரிந்து கொள்ளும் விதமாகவும் வடிவமைக்கப்பட்ட இம்மென்பொருளில் வரைந்த படங்களை முன்னணி படக் கோப்பு வடிவங்களாக சேமிக்கமுடியும்.

# எஸ்.எம்.கிருஷ்ணா மீது கூட்டமைப்பினருக்கு நம்பிக்கையில்லை!

கடந்த வாரம் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா நான்கு நாள் விஜயமாக இலங்கை வந்திருந்தார். அவரது வருகையின் சிறப்பான நோக்கம் குறித்து இலங்கை - இந்திய அரசுகள் விசேட அறிக்கைகள் எதையும் விடுத்திருக்கவில்லை. ஆனாலும் வழமைபோல தமிழ் ஊடகங்கள் தமது 'மூக்குச் சாத்திரங்கள்' மூலம் பல்வேறு சரவெடிகளை ஊடக அரங்கில் வெடிக்க வைத்திருந்தன.

'இலங்கை அரசு தமிழர்களுக்கு உரிமை வழங்குவதைத் தொடர்ந்து மறுத்து வருவதால், அதைக் காட்டமாகத் தட்டிக் கேட்கவே கிருஷ்ணா வருகிறார்' என சில தமிழ் ஊடகங்கள் கூறின. இன்னும் சில, 'தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் தொடர்ந்து தாக்கப்படுவது குறித்துப் பேசவே கிருஷ்ணா வருகிறார்' எனத் தெரிவித்தன. இன்னும் சில 'இலங்கை அரச தலைவர்களுடன் பேசுவதற்கு முன்னர் தமிழ் கூட்டமைப்பினரைச் சந்தித்து, அவர்கள் அரசு மீது தெரிவிக்கும் குற்றச்சாட்டுகளைக் கேட்ட பின்னர்தான் இலங்கை அரச தலைவர்களைச் சந்தித்து அது பற்றி எடுத்துரைப்பார்' என 'தூரதிருஷ்டியுடன்' பேசின.

ஆனால் கிருஷ்ணா வந்தார். தமிழ் ஊடகங்கள் கற்பனையில் வகுத்த திட்டங்களின்படி அவரது நிகழ்ச்சிகள் எதுவும் அமையவில்லை. ஏற்கெனவே பல மாதங்களுக்கு முன்னர் இந்திய - இலங்கை அதிகாரிகளால் வகுத்ததிற்கொப்ப அவரது நிகழ்ச்சிகள் நடந்தேறின. வழமை போல '13ஆவது திருத்தத்திற்கும் அப்பால் சென்று இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது' என்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் உறுதி மொழியைப் பெற்றுக்கொண்டு இந்தியா திரும்பிவிட்டார்.

வந்த மனிசன் அத்துடன் போயிருந்தால் போதாதா? இலங்கை ஜனாதிபதி தந்த உறுதிமொழியில் நம்பிக்கை தெரிவித்ததுடன் நின்றுவிடாது, இலங்கை அரசாங்கம் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக அமைக்கவுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு ஒரு பாராட்டும், நம்பிக்கையும் தெரிவித்து, அதில் பங்குபற்ற மறுத்து வரும் தமிழ் கூட்டமைப்பினருக்கு பிடரியில் ஒரு அடியும் கொடுத்துவிட்டுச் சென்றிருக்கிறார்.

அதனால் தான் அது பற்றி பி.பி.சி. தமிழோசையின் கேள்வியொன்றுக்குப் பதிலளித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வார்த்தைகள் வெளிவராது மிண்டி விழுங்கினார்.

இந்திய வெளிவிவகார அமைச்சரின் விஜயத்தின் போது கிடைக்கும் ஏதாவது துரும்பைப் பாவித்து, தமது அரசியல் கட்டை வண்டியைத் தமிழ் மக்கள் மத்தியில் தொடர்ந்தும் ஓட்டுவதற்கு ஏதாவது வாய்ப்புக் கிடைக்காதா என ஏங்கிய தமிழ் கூட்டமைப்பினர், கிருஷ்ணா கொடுத்த 'அல்வா' காரணமாக இப்பொழுது கிருஷ்ணா மீது மிகவும் காட்டமாக இருப்பதாகத் தெரிகிறது.

அதன் எதிரொலியாக, கிருஷ்ணா என்ற நந்தியைத் தாண்டி டில்லி மூலஸ்தானத்துக்கு நேரடியாகவே சென்று மகாவிஷ்ணுவைத் தரிசிக்க முடிவெடுத்துள்ளனர் கூட்டமைப்பினர்!



தமிழ் கூட்டமைப்பினரின் இந்த டில்லிக்குக் காவடி எடுக்கும் படலம் ஒன்றும் புதுமையான ஒன்றல்ல. ஏற்கெனவே காலாதிகாலமாக தமிழ் தலைமைகள் எல்லாமே 'இந்தியா மூலம் இந்தா பிடுங்கிக் காட்டுகிறோம்' எனச் சவால் விடுவதும், பின்னர் நினைத்ததைச் சாதிக்க முடியாமல் போனதும், 'வயிற்றுக் குத்தை நம்பினாலும் வடக்கத்தையானை நம்பேலாது' என மறைவாகப் 'புறணி' சொல்வதும் நடந்து வருபவைதான்.

சரி, தமிழ் கூட்டமைப்பினர் டில்லி சென்று புதிதாக என்னதான் செய்யப் போகிறார்கள்? அங்கு இந்திய அரசின் கொள்கை முடிவுகளை எடுக்கும் காங்கிரஸ் கட்சியின் தலைவி திருமதி சோனியா காந்தியையோ பிரதமர் மன்மோகன் சிங்கையோ அல்லது வேறு முக்கியமான தலைவர்களையோ சந்திக்கப் போவதில்லை. அங்கும் இதே வெளிநாட்டமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவையோ அல்லது அவருக்குக் கீழுள்ள அவரது செயலாளரையோதான் சந்தித்துவிட்டுத் திரும்புவர். ஆனால் ஊடகங்களுக்கு, 'பேச்சுவார்த்தைகள் குறித்து இப்பொழுது எதையும் வெளியிட முடியாது' என, பெரும் இராணுவ இரகசியத்தைக் காப்பாற்றுவது போல இரா.சம்பந்தன் அறிக்கை விடுவார்.

இப்படி இப்படியாக நாடகத்தின் ஒவ்வொரு காட்சி போல, தமிழ் கூட்டமைப்பினர் தமிழ் மக்கள் முன்னால் சீன் மாற்றி சீனாக காட்சிகளை மாற்றி மாற்றிக் காட்டிக்கொண்டே இருப்பார்கள். அதன் மூலம் புள்ளிகள் கூடி தேர்தல்களில வெல்லலாம் என்பதில் இந்த 'சோணகிரி' தமிழன் இருக்கும்வரை அவர்களுக்கு அசையாத நம்பிக்கை உண்டு.

அதுவும் இப்பொழுது எல்லோரும் வட மாகாணசபைத் தேர்தலை ஆவலுடன் எதிர்நோக்கி இருப்பதால், தமிழ் கூட்டமைப்பினரிடம் இருந்து இப்படியான மேலும் பல நாடக அரங்கேற்றங்களை எதிர்பார்க்கலாம்.

இந்திய வெளிநாட்டமைச்சர் வந்த கையோடு தமிழ் கூட்டமைப்பினர் டில்லிக்கு காவடி எடுப்பது, அவர்கள் எதிர்பார்க்கும் நன்மைகளைவிட தீமைகளையே வழங்கப்போவது நிச்சயம். ஒன்று, கிருஷ்ணா மீது நம்பிக்கை இல்லாததால்தான் டில்லிக்கு நேரடியாகச் செல்கிறார்கள் என்ற கருத்து தனிப்பட்ட முறையில் கிருஷ்ணாவின் வெறுப்பைச் சம்பாதிப்பதுடன், அவரது அரசாங்கத்தின் அதிருப்தியையும் சம்பாதிக்கும்.

இரண்டாவது, இலங்கையில் இந்திய வெளிநாட்டமைச்சருடன் பேச முடியாத ஏதோவொரு விடயத்தை இந்தியா சென்று கூட்டமைப்பினர் பேச முனைவது, அவர்கள் இலங்கைக்கு எதிராகச் சதி சூழ்ச்சிகளில் ஈடுபட முயல்கிறார்கள் என்ற கருத்தை இலங்கை மக்கள் மத்தியில் உருவாக்கும்.

தமிழ் கூட்டமைப்பினர் தமக்கு வாக்களித்த மக்களுக்கு ஏதாவது நன்மை செய்ய விரும்பினால், முதலில் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பொறுப்பில் இருக்கும் இலங்கை அரசுடன் இதயசுத்தியுடன் பேச வேண்டும். தென்னிலங்கையில் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ஆதரவாக எப்பொழுதும் குரல் கொடுத்து வரும் இடதுசாரி மற்றும் ஜனநாயகக் கட்சிகளுடன் பேச வேண்டும். தமிழ் கூட்டமைப்பினர், அவர்களது சகபாடியான ஐக்கிய தேசியக் கட்சியுடன் பேசி, அக்கட்சியை ஒரு வழிக்குக் (தீர்வுகளைக் குழப்பாமல் இருக்க) கொண்டு வர வேண்டும்.

அதைவிடுத்து தமிழ் கூட்டமைப்பினர் அமெரிக்காவுக்கும் பிரித்தானியாவுக்கும் இந்தியாவுக்கும் திரும்பத் திரும்ப மரதன் ஓடுவதால் எந்தவொரு பலனும் ஏற்படப் போவதில்லை. அது 'உறியிலை நெய்யை வைத்துக்கொண்டு ஊர் எல்லாம் அலைந்த கதை' யாகவே இருக்கும்.

தமிழ் கூட்டமைப்பினரின் இந்த புத்திசாதுரியமற்ற முட்டாள்தனமான நடவடிக்கைகளால் தமிழ் மக்களுக்கு மேலும் துன்பங்கள்தான் பெருகும்.

தமிழ் மக்களது பிரச்சினைகளுக்கு தீர்வு ஏற்படாது இழுபட்டுச் செல்வதையே தமிழ் கூட்டமைப்பினர் எப்பொழுதும் திட்டமிட்டுச் செயற்படுத்தி வந்துள்ளனர் என்பதை, இந்தக் கட்டத்திலாவது தமிழ் மக்கள் புரிந்து கொண்டால் அவர்களுக்கும் நல்லது, நாட்டுக்கும் நல்லது.

**வி.சின்னத்தம்பி**


# கிழக்கிலிருந்து கருத்து...

தமிழ் காங்கிரஸ், தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக்கூட்டணி என்ற வரலாற்றுத் தொடர்ச்சியின் இன்றைய வடிவமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகும். பொன் அருணாச்சலம் தொடங்கி அமிர்தலிங்கம் வரையிலான மிகப்பெரும் தலைமைகள் வழிநடாத்திய அரசியலையே இன்றைய தமிழ்க் கூட்டமைப்பும் அதன் தலைமையும் பிரதிபலிக்கின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கூட ஐம்பது வருட அரசியல் அனுபவம் மிக்க பழுத்த அரசியல்வாதி என்று போற்றப்படுகின்றார். தலைமை என்பது வல்லமை வாய்ந்ததாக இருப்பது மட்டும் அல்ல நல்லெண்ணம் கொண்டதாகவும் இருப்பது அவசியம்.

ஏனெனில் ஒரு மக்கள் கூட்டத்தை, ஒரு இனத்தை, ஏன் ஒரு நாட்டினையே வழிநடத்தும் பொறுப்பினை இந்த அரசியல் தலைமைகளே கையகப்படுத்தி இருக்கின்றன. அப்படியானதொரு பொறுப்பு வாய்ந்த ஸ்தானத்தில் அமர்ந்திருப்பவர்தான் சம்பந்தனாகும்.

அதேபோன்றுதான் கிழக்கு மாகாணத்தின் அரசியல் வரலாறு என்பதும் காலாகாலமாக யாழ் மேலாதிக்கத் தலைமைகளால் வஞ்சிக்கப்பட்டு வந்திருக்கின்றது. செல்லையா இராசதுரை, தங்கதுரை, அஷ்ரப் என்று கிழக்கு மாகாணத்தின் தனித்துவங்களுக்காக தமது அரசியல் வாழ்வையே அர்ப்பணித்தவர்கள் பலர்.

அவர்களின் அந்த ஒடுக்கப்பட்ட கிழக்கு மாகாண மக்களின் பிரதிபலிப்புகளில் இருந்து அந்த ஆளுமைகளின் தொடர்ச்சியாக உருவானதே தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளும் அதன் தலைவர் பொறுப்பில் இருக்கும் சந்திரகாந்தன் அவர்களுமாகும்.

கடந்த மூன்று தசாப்தங்களாக இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டிருக்கின்றது. விரும்பியோ விரும்பாமலோ தமிழரின் அரசியல் அபிலாசைகள் பேச்சுவார்த்தைகள் ஊடாக மட்டுமே தீர்க்கப்பட்டாகவேண்டும் என்பதே புலிகளின் அழிவுக்குப் பின்னரான இன்றைய யதார்த்தமாகும்.

இதனை புரிந்துகொண்டதனால்தான் புலிகளின் தாகம் தமிழீழ தாயகம் என்றிருந்த நிலையில் பிரபாகரனை தமிழ் மக்களின் ஏகதலைவனாக ஏற்றுக்கொண்டிருந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் இன்று அரசுடன் மாகாண சபைகளுக்கான காணி, பொலிஸ் அதிகாரங்கள் பற்றி பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆனால் கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் கிழக்கு மாகாணசபை உருவாக்கப்பட்டபோது தமிழீழத்தை தவிர மற்ற எதையும் ஏற்றுக்கொள்வது தமிழ்தேசியத் துரோகம் என்று இதே கூட்டமைப்பினரே சர்வதேசம் எங்கும் பறந்து பறந்து பிரசாரம் செய்துவந்தனர்.

கிழக்கு மாகாணசபை உருவாக்கப்பட்டபோது அதை ஏற்றுக்கொள்ளமாட்டோம் என்று பங்கெடுக்காமல் புறக்கணித்தவர்கள் இன்று வடமாகாணசபை ஒன்றை உருவாக்குவதற்காக அரசிடம் தவம் கிடக்கின்றனர்.

இன்றைய நிலையில் தமிழ் பேசும் மக்களின் சார்பில் அரசுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுகின்றோம் என்று சொல்லிக்கொள்ளும் கூட்டமைப்பினர், வடக்கு கிழக்கு இணைப்பு, மாகாணசபைக்கான காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டே அரசுடனான பேச்சுகளை முன்னெடுத்து வருகின்றனர்.


அரசு கூட வடக்கு கிழக்கு மாகாண இணைப்பு என்பதைத் தவிர காணி, பொலிஸ் அதிகாரங்கள் பகிர்வு விடயத்தில் தனது இறுக்கத்தைத் தளர்த்தக்கூடிய வாய்ப்புகள் அதிகமாகக் காணப்படுகின்றன. இந்தியாவும் எதிர்பார்ப்பது போல இக்கோரிக்கைகளை தமிழ் கட்சிகள் ஒருமித்து முன்வைக்கின்ற வேளைகளில் 13 வது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தக் கூடிய சந்தர்ப்பங்கள் புலப்படுகின்றன.

இந்தச் சந்தர்ப்பங்களை தமிழ்க் கட்சிகள் அனைத்தும் இணைந்து சாணக்கியமாக பயன்படுத்துகின்ற பட்சத்தில் அதிகாரப் பகிர்வு விடயங்களில் தமிழ் மக்களின் நீண்டகாலப் பிரச்சினைகள் மாகாணசபைகளை அடிப்படையாகக் கொண்டேனும் தீர்த்து வைக்கக்கூடிய வாய்ப்பு உண்டு.

**-மீன்பாடும் தேனாடான் கட்டுரையிலிருந்து-**

# பசி

-அலெக்ஸி டோல்ஸ்டோய்-



ஒரு சேவலும் ஒரு கோழியும் ஒன்றாக வாழ்ந்து வந்தன. ஒரு நாள் இரண்டும் இரைதேடக் காட்டுக்குச் சென்றன. சேவல் ஒரு மரத்தின் மேல் ஏறி, பழங்களைப் பறித்துப் போட்டது. கோழி கீழே இருந்து அவற்றைப் பொறுக்கிக் கொண்டிருந்தது. அப்போது கல்லைப் போன்ற கனத்துடன் இருந்த ஒரு பழம் கோழியின் கண்ணில் வந்து விழவே, அதன் கண்ணில் பலமாக அடிபட்டு விட்டது. உடனே கோழி அவ்விடத்தை விட்டுப் போய் அழுது கொண்டிருந்தது.

அந்த வழியாக ஒரு வண்டி வந்தது. வண்டியிலிருந்தவர்கள் பிரபுக்கள். அவர்கள் கோழியைப் பார்த்து "கோழியே! கோழியே! நீ ஏன் அழுகிறாய்?" என்று கேட்டார்கள்.

"சேவல் என் கண்ணைக் கெடுத்து விட்டது" என்றது கோழி.

"சேவலே சேவலே! நீ ஏன் கோழியின் கண்ணைக் கெடுத்தாய்?"

"இந்த மரம் என் கால் செட்டையைக் கிழித்து விட்டது. அதனால் தான்" என்றது சேவல்.

"மரமே மரமே! நீ ஏன் சேவலின் கால் செட்டையைக் கிழித்தாய்?"

"ஆடுகள் வந்து மேய்ந்தன. அதனால் தான்" என்றது மரம்

"ஆடுகளே, ஆடுகளே! நீங்கள் ஏன் மரத்தை மேய்ந்தீர்கள்?"

"எங்களை மேய்க்கும் இடையர்கள் எங்களைக் கவனிக்காமல் விட்டு விட்டார்கள் அதனால்தான்"

"இடையர்களே, இடையர்களே! நீங்கள் ஏன் ஆடுகளைக் கவனிக்காமல் விட்டு விட்டீர்கள்?"

"எங்கள் முதலாளியம்மா எங்களுக்கு ரொட்டி கொடுக்க வில்லை அதனால்தான்"

"முதலாளியம்மா, முதலாளியம்மா! நீங்கள் ஏன் இடையர்களுக்கு ரொட்டி கொடுக்கவில்லை?"

"பன்றி வந்து, மாப்பானையைக் கவிழ்த்துவிட்டது. அதனால்தான்"

"பன்றியே, பன்றியே! நீ ஏன் முதலாளியம்மாவின் மாப்பானையைக் கவிழ்த்து விட்டாய்?"

"ஓநாய் வந்து என் குட்டியைத் தூக்கிக்கொண்டு ஓடிவிட்டது. அதனால்தான்".

"ஓநாயே, ஓநாயே! நீ ஏன் பன்றிக் குட்டியைத் தூக்கிக்கொண்டு ஓடி விட்டாய்?"

"எனக்குப் பசியாக இருந்தது. அதனால்தான்"

# 27 நாட்களில் 100 குழந்தைகள் மேற்கு வங்கத்தில் உயிரிழப்பு



(புதுடில்லி)

இந்தியாவில் மேற்கு வங்க மாநிலம் மால்டா மாவட்டத்தில் இம்மாதத்தில் சிகிச்சை பயனின்றி சுமார் 100 பச்சிளம் குழந்தைகள் பலியாகியுள்ளனர்.

மேற்கு வங்காள மாநிலம் மால்டா மாவட்டத்தில் இம்மாதம் முதலாம் திகதி முதல் 27ஆம் திகதி வரை மூன்று மாதம் முதல் மூன்று வயதான குழந்தைகள் சுமார் ஆயிரத்து 600 பேர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் சிகிச்சை பலனின்றி 100 குழந்தைகள் பலியானதாக மாவட்ட மருத்துவ உயர் அதிகாரி தேபாஷிஸ் பட்டசார்ஜி தெரிவித்துள்ளார்.

மால்டா மாவட்டத்தில் சுகாதாரமற்ற முறையில் குழந்தைகள் பிறப்பதால் ஏற்படும் நோய் காரணமாக தினமும் குறைந்தது மூன்று முதல் நான்கு குழந்தைகள் இறப்பதாக தலைமை மருத்துவ அதிகாரி ஜரியத் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் பி.சி.ராய குழந்தைகள் வைத்தியசாலையில் சுமார் 18 குழந்தைகளும், ஒக்டோபர் மாதம் 25 - 28 ஆம் திகதிகளில் அதே வைத்தியசாலையில் 16 குழந்தைகளும் சிகிச்சை பலனின்றி இறந்துள்ளன.

இதையடுத்து அதே ஒக்டோபர் மாதம் 27-28 ஆம் திகதிகளில் பர்த்வான் வைத்தியசாலையில் 12 குழந்தைகள் இறந்ததாக வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# "தானே"க்கு உதவிய ரஜனி

(சென்னை)

இந்தியாவில் தமிழ்நாட்டில் தானே புயலால் ஏற்பட்ட சேதங்களுக்கு நிவாரண உதவியாக நடிகர் ரஜினிகாந்த் 10 இலட்சம் ரூபா வழங்கியுள்ளார்.

தமிழ்நாட்டில் கடந்த வருடம் ஏற்பட்ட தானே புயலால் கடலூர், நாகப்பட்டிணம் உட்பட கடற்கரை மாவட்டங்கள் அதிகமான சேதத்தைச் சந்தித்தன.

மக்கள் தங்களுடைய அன்றாட வாழ்க்கையை இழந்து அவதிப்பட்டு வருகின்றனர். தானே புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக மாநிலத்தில் இருந்து பல்வேறு தொழிலதிபர்கள, சினிமா நட்சத்திரங்கள் நன்கொடை வழங்கி வருகின்றனர்.



இந்த வரிசையில் தலைமைச் செயலகத்தில் முதல்வர் ஜெயலலிதாவை நேற்றுமுன்தினம் சந்தித்த நடிகர் ரஜினிகாந்த், 10 இலட்சம் ரூபாவுக்கான காசோலையை வழங்கினார்.

அதன் பின் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது, மருத்துவமனையில் நான் உடல்நலமின்றி இருந்த போது, முதல்வர ஜெயலலிதா நலம் விசாரித்தார்.

அதற்காக மரியாதை நிமித்தமாக முதல்வரைச் சந்தித்தேன். மேலும் தமிழகத்தில் தானே புயலால் அதிகமான மக்கள் தங்களுடைய அன்றாட வாழ்க்கையை இழந்துள்ளனர்.

அவர்களுக்காக தமிழக அரசு, மீட்புப் பணிகளை மேற்கொண்டாலும் என்னால் இயன்றவரை புயல் நிவாரணத்துக்காக 10 இலட்சம் ரூபாவை அளித்தேன் என்றார்.

இரசிகர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள் என்ற கேள்விக்கு, விரைவில் இரசிகர்களை திரையின் மூலமாகச் சந்திப்பேன என்று கூறினார்.

# சீமான், அமீர் நீதிமன்றில் ஆஜர்



(இராமேஸ்வரம்)


இந்திய இறையாண்மைக்கு எதிராகப் பேசியதாக இராமேஸ்வரம் நீதிமன்றத்தில் நேற்று முன் தினம் இயக்குனர்கள் சீமான், அமீர் ஆகியோர் ஆஜரானார்கள்.

கடந்த 2008ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் தமிழ்நாட்டின் இராமேஸ்வரத்தில் தமிழ் திரையுலகம் சார்பில் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்திற்கு இயக்குனர் பாரதிராஜா தலைமை தாங்கினார். கூட்டத்தில் இயக்குனர்கள் சீமான், அமீர் ஆகியோர் இந்திய இறையாண்மைக்கு எதிராகப் பேசியதாக புலனாய்வுப் பிரிவுப் பொலிஸார் வழக்குப்பதிவு செய்து குற்றப்பத்திரிகையை இராமேஸ்வரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர்.

இந்த வழக்குத் தொடர்பாக இராமேஸ்வரம் நீதிமன்றத்தில் சீமான், அமீர் ஆகியோர் ஆஜரானார்கள். இந்த வழக்கின் மீதான விசாரணை முடிந்து சீமான், அமீர் ஆகியோர் நீதிமன்றத்தில் இருந்து வெளியே வந்தனர்.

பின்னர் சீமான் நிருபர்களிடம் கூறியதாவது, மத்திய அரசு பல கோடி ரூபாய நிதியை இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு ஒதுக்கீடு செய்துள்ளது. ஆனால் இலங்கையில் உள்ள தமிழர்களுக்காகக் கட்டி கொடுத்த வீடுகளில் தமிழர்கள் குடியேறவில்லை என்றார்.







# இந்தியாவுக்கு பில்கேட்ஸ் ஆலோசனை

(புதுடில்லி)

சர்வதேச அளவில் வல்லரசாக உருவாகி வரும் இந்தியாவிற்கு மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் நிறுவனர் பில்கேட்ஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

உலகின் மிகப்பெரிய பணக்காரரான மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் அதிபர் பில்கேட்ஸ் தனியார் தொலைக்காட்சி ஒன்றிற்குப் பேட்டி அளித்துள்ளார்.



அப்போது பில்கேட்ஸ் கூறியதாவது, இந்தியா சர்வதேச அளவில் வல்லரசு நாடாக உருவாகி வருகிறது. அதற்கான நடவடிக்கைகளிலும் அது ஈடுபட்டு வருகிறது.

கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட முக்கிய அம்சங்களில் இந்தியா மேலும் முன்னேற்றம் அடைய வேண்டும். அதன்மூலமே உண்மையான வளர்ச்சியை இந்தியா அடைய முடியும்.

கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட முக்கிய அம்சங்களில் ஏற்படும் வளர்ச்சியே நாட்டை நிலையான மற்றும் நிகரற்ற முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் என்று நான் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

இதுபோன்ற முக்கிய அம்சங்களில் சீனா சிறந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இந்நடவடிக்கைகள் குறித்து சீனாவிடம் இந்தியா கற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர் இந்தியாவிற்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## சர்வதேச வரி ஒப்பந்தத்தில் இந்தியா கைச்சாத்து

சர்வதேச வரி ஒப்பந்தத்தில் இந்தியா கைச்சாத்திட்டுள்ளது.

பரீஸைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பின் வரித்துறை தொடர்பான ஒத்துழைப்பு ஒப்பந்தத்திலேயே இந்தியா கைச்சாத்திட்டுள்ளது.

சர்வதேச ரீதியில் ஊழலை ஒழிக்க வரி செலுத்துபவர்களுக்கு மரியாதை அளிக்கும் வகையிலும் இந்த ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மணிப்பூரில் வாக்குப்பதிவு



(மணிப்பூர்)

மணிப்பூர் மாநிலத்தில் சட்டப் பேரவைகளுக்கான வாக்குப்பதிவு நேற்று இடம்பெற்றது.

மணிப்பூர் மாநிலத்தில் சட்டப் பேரவைகளுக்காக உள்ள 60 தொகுதிகளுக்கும் வாக்குப் பதிவு நடைபெறுகிறது. பொது மக்கள் தங்களுடைய வாக்குகளை அவர்களுக்குரிய வாக்குச சாவடிகளில் பதிவு செய்தனர்.

மொத்தம் 279 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். மொத்தமுள்ள 2357 வாக்குச் சாவடிகளில் சுமார் 875 வாக்குச் சாவடிகள் பதற்றமானவையாகக் கருதப்படுவதால் அப்பகுதிகளில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

## இயேசுவே மெசியா என அறிக்கையிடுவோம்




இருபத்தோராம் நூற்றாண்டின் மனிதர்கள் போதனைகளைவிட சாதனைகளுக்கும், அறிவுரைகளைவிட வாழ்க்கை அனுபவங்களுக்கும் அதிக அழுத்தம் தருகின்றனர். மறைந்த திருத்தந்தை இரண்டாம் ஜோன்போல் தனது 'மீட்பரின் பணி' என்னும் திருமடலில் கூறியுள்ளார். இந்த மனநிலை எல்லாக் காலத்து மனிதர்களுக்கும் இருக்கிறது. இயேசுவின் காலத்திலும், அவரது போதனைகளைக் கேட்ட மக்கள் வியந்தனர். காரணம் அவரது போதனை அதிகாரம் நிறைந்ததாக இருந்தது. அந்த அதிகாரத்தை இயேசுவின் செயல்களிலும் அவர்கள் கண்டனர். இயேசு தீய ஆவியிடம் "வாயை மூடு. இவரைவிட்டு வெளியே போ" என்று அதிகாரத்தோடு அதட்டி, வெளியேற்றினார். எனவேதான், மக்கள் திகைப்புற்று, இது என்ன? இது அதிகாரம் கொண்ட புதிய போதனையாய் இருக்கிறதே! என்று வியந்தனர். நமது சொற்கள் அதிகாரம் கொண்டதாக அமையவேண்டுமென்றால், நமது சொற்களுக்கும், செயல்களுக்கும் முரண்பாடு இல்லாமல் இருக்கவேண்டும். நமது சொற்கள் நமது செயல்களில் எதிரொலிக்க வேண்டும்.

அப்போதுதான் இயேசுவின் மீட்புப்பணியில் நாம் ஒன்றானவர்கள் ஆவோம். புனிதர்கள் தங்கள் வாழ்வில் கடவுளின் திருநாமத்தை மையப்படுத்தி அதிகாரத்துடன் செபித்து, புதுமைகள் புரிந்து நல்வழி காட்டினர். அந்த வழியில் நாங்களும் செல்ல முற்படுவோம். இயேசுவே மெசியா என அதிகாரத்துடன் அறிக்கையிடுவோம்.

-ஆர்.மதுசன், பாசையூர்

## எதிர்கொள்ளத் தயார்

என் மீது முதல்வர் ஜெயலலிதா சார்பில் பொய் வழக்கு தொடரப்பட்டுள்ளது என்றும், அதை சட்டப்படி சந்திக்கவுள்ளதாகவும் தி.மு.க. பொருளாளர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.


இதுகுறித்து அவர் கூறுகையில், உச்ச நீதிமன்றத்தில் நீதிபதி சொன்ன கருத்தைத் தான் நான் கூறினேன். அதற்காக, என் மீது பொய் வழக்கு போடப்பட்டுள்ளது. இதனை சட்டப்படி சந்திக்கத் தயார் என அவர் தெரிவித்தார்.



பஞ்சாப் மாநிலத்தில் விரைவில் சட்டசபைத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், அங்கு தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ள காங்கிரஸ் கட்சி பொதுச் செயலாளர் ராகுல், சீர்ஹிந்த் நகரில் நடந்த கூட்டத்தில் கலந்து கொண்டார்.

உலகச் செய்திகள்

# இராணுவப் பயிற்சி நிலையம் மீது பாகிஸ்தானில் எறிகணை வீச்சு




(இஸ்லாமாபாத்)


பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்திலுள்ள இராணுவ பயிற்சி நிலையத்தின் மீது எறிகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

கடந்த வருடம் அமெரிக்க விசேட பாதுகாப்பு பிரிவினரால், ஒசாமா பின்லேடன் படுகொலை செய்யப்பட்ட அபோத்தாபாத்திற்கு அணமையிலுள்ள கட்டடத்தின் மீதே, இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் கட்டடத்தின் சுவருக்கு சேதம் ஏற்பட்டுள்ள போதிலும், எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை எனத் தகவல்கள் குறிப்பிடுகின்றன. இத் தாக்குதலுக்கு இதுவரை எந்தவொரு அமைப்பும் உரிமை கோராத போதிலும், பாதுகாப்பு பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். பாகிஸ்தானின் மிக முக்கியமாக இராணுவ பயிற்சி முகாம்களில் ஒன்றாக, தாக்குதலுக்குள்ளான இந்தப் பயிற்சி நிலையம் கருதப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மேற்குலக நாடுகளுடன் அணுத்திட்டப் பேச்சுக்குத் தயார்

## ஈரான் ஜனாதிபதி மீண்டும் அறிவிப்பு



(தெஹ்ரான்)

மேற்குலக நாடுகளுடன் மீண்டும் அணுத்திட்டப் பேச்சுவார்த்தைகளை நடத்தத்தாம் விரும்புவதாக ஈரான் ஜனாதிபதி மஹ்மூத் அஹமதிநிஜாத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் மீது விதிக்கப்படுகின்ற பொருளாதாரத் தடைகள் மூலம் தம்மைக்கட்டுப்படுத்த முடியாது. ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா போன்ற நாடுகள் ஈரான் மீது கடுமையான தடைகளை விதித்துவருகின்ற நிலையில் ஈரானின் அணுத்திட்டம் எரிபொருள் தேவைகளுக்காக மாததிரமே பயன்படுத்தப்படுகின்றது என்றார்.

மேற்குலக நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்த விரும்புவதாக ஈரானின் உயர் மட்டத்தில் உள்ள ஒருவர் தெரிவித்துள்ள சந்தர்ப்பமாக இது கருதப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் நிரந்தர உறுப்புரிமை உடைய நாடுகளுக்கும் ஈரானுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் 2011 ஆம் ஆண்டு இடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது..

# அரசியலிலிருந்து ஹிலாரி கிளிண்டன் ஓய்வு



(வோஷிங்டன்)

அமெரிக்க அரசியலிலிருந்து ஓய்வு பெற ஹிலாரி கிளிண்டன் முடிவுவெடுத்துள்ளதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இந்தாண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் பராக் ஒபாமா வெற்றி பெற்றாலும்,

மேலும் தொடர்ந்து இரண்டாவது முறையாக வெளிவிவகாரத்துறை அமைச்சர் பதவியில் நீடிக்க விரும்பவில்லை, தனக்குப் பதிலாக வெளிவிவகாரத்துறை அமைச்சராக மற்றொருவரை ஒபாமா நியமிக்கும் வரை இப்பதவியில் இருக்க விரும்புவதாக அவர் தெரிவித்தார்.

20 ஆண்டுகளுக்கும் மேலாக தீவிர அரசியலில் ஈடுபட்டு விட்டதால் தனக்கு ஓய்வு தேவைப்படுவதாகவும் தொடர்ந்து இதேபோன்று அதி முக்கியத்துவம் வாய்ந்த பதவியில் நீடிக்க விரும்பவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 1993ஆம் ஆண்டு முதல் 2001ஆம் ஆண்டு வரை பில் கிளிண்டன் ஜனாதிபதியாக இருந்தபோது, அமெரிக்காவின் முதல் பெண்மணியாக ஹிலாரி வலம் வந்தார். இதன் பின் 2001ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு வரை நியூயார்க்கின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் ஒபாமாவும், ஹிலாரியும் போட்டியிட்டனர். தேர்தலில் ஒபாமா வெற்றியடைந்தால் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டவுடன், ஹிலாரிக்கு வெளிவிவகாரத்துறை அமைச்சர் பதவி அளிக்கப்பட்டது.

வெளிவிவகாரத்துறை அமைச்சராக இருப்பவர் தேர்தலில் பங்கேற்கக்கூடாது. அத்துடன் சமீப காலமாக தேர்தல் சார்ந்த விவாதக் கூட்டங்களிலும் ஹிலாரி பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# பொருளாதாரப் பற்றாக்குறை; அமெரிக்க இராணுவம் குறைப்பு



(வோஷிங்டன்)

பொருளாதார பற்றாக்குறையின் காரணத்தினால் செலவை கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக அமெரிக்க இராணுவ வீரர்களின் எண்ணிக்கையை குறைக்க அந்நாட்டு அரசு முடிவெடுத்துள்ளது.

இதன் ஒரு பகுதியாக அடுத்த 10 ஆண்டுகளுக்குள் அமெரிக்க இராணுவ வரவு-செலவுத்திட்டத்தில் 48,700 கோடி அமெரிக்க டொலர்களை குறைக்க அந்நாட்டு அரசு திட்டமிட்டுள்ளது.

செலவைக் குறைக்க அரசு தயாரித்துள்ள திட்டங்கள் குறித்து அமெரிக்க பாதுகாப்புத்துறை அமைச்சர் லியோன் பனெட்டா கூறியதாவது: தற்பொழுது 5,62,000 போர் வீரர்கள் உள்ளனர். இந்த எண்ணிக்கையை 4,90,000 ஆக குறைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு 2017ஆம் ஆண்டுக்குள் இலக்கை எட்ட முடிவு செய்துள்ளோம். குறிப்பாக கடற்படையில் மட்டும் 20,000 வீரர்களைக் குறைக்க திட்டமிட்டுள்ளோம்.

மேலும் பல ஆண்டுகளாக சேவையில் உள்ள சில போர் விமானங்கள், படையில் இருந்து விலக்கிக் கொள்ளப்படும். விமானபடையில் மொத்தமுள்ள 60 படையணிகளில் 6-ஐ இரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். ஏவுகணைகளைச் செலுத்துவதற்கான வசதியில்லாத போர்க்கப்பல்களை விலக்கிக் கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது.

இராணுவம் சார்ந்த சில பணிகளை ஒப்பந்தமுறையில் விடுவது, பணியாளர்களை முறைப்படுத்துவது போன்றவை மேற்கொள்ளப்படும். இதுபோன்ற நடவடிக்கைகள் மூலம் அடுத்த 5 ஆண்டுகளில் 6,000 கோடி அமெரிக்க டொலர்களை சேமிக்க முடியும்.

எனினும் உலகம் முழுவதும் எந்தப் பகுதிக்கும் விரைவாக சென்று சேரும் வகையில் இராணுவப் படையணிகள் தயார் நிலையில் வைக்கப்படும். குறிப்பாக ஆசிய - பசிபிக் பகுதிகளிலும், மத்திய கிழக்குப் பகுதிகளிலும் எதிரிகளின் தற்காப்பு அரண்களைத் தகர்க்க ஏதுவாக அடுத்த தலைமுறைக்கான போர் விமானங்களை உருவாக்கத் திட்டமிட்டுள்ளோம்.

வானில் பறந்தபடியே போர் விமானங்களில் எரிபொருளை நிரப்பும் தொழில்நுட்பத்தைக் கொண்டு வரவுள்ளோம். அவுஸ்ரேலியா மற்றும் பிலிப்பைன்ஸ் அரசுகளின் ஒத்துழைப்புடன் அப்பகுதிகளில் கடற்படையை நிறுத்தி வைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அதேபோன்று பஹ்ரைனில் ரோந்துக் கப்பலையும், சிங்கப்பூரில் சிறிய அளவிலான போர்க் கப்பலையும் நிறுத்தி வைக்கத் திட்டமிட்டுள்ளோம் என்றும் தெரிவித்தார்.

# பதிவிறக்கப் பெட்டகம்

கலைஞன் நமக்கு அழகைக் காட்டுவது மாத்திரம் அல்ல, அநேக சமயங்களில் அதைக் காண நம்மைச் சித்தப் படுத்தியும விடுகிறான். குதிரையின் கண்களில் ஒரு மறைப்பைப் போட்டு ஓட்டுகிறார்கள் பாருங்கள் அதே மாதிரி கலைஞனும் நம் கண்களை நேர்வழியில் திருப்புகிறான். மறைக்க வேண்டியதை மறைத்து, விளக்க வேண்டியதை விளக்கி, திருத்த வேண்டியதைத் திருத்தி, மெருகு கொடுப்பது கலைஞனின் நுட்பம்.

– தி.ஜ.ர

எனது சிறுவயதில், அம்மையிடமிருந்து கற்று, நியமமாகி வைத்திருந்த சூரியநமஸ்காரம் இன்றும் என் மனதில் இருக்கிறது. நகர வாழ்க்கையின் இறுக்கமும் பரபரப்பும், நகரப் பேருநதின் நெரிசலும் என் புலன்களையும் பொறியையும் மழுங்கடித்து விட்ட இந்த நேரத்திலும் சூரியன் எனக்கு அற்புதமானவன்.

இப்போதெல்லாம் மார்க்சியத்தில் பற்றும் நம்பிக்கையும் கூடி வந்து நாத்திகனாகிவிட்ட போதும் சூரியன் எனக்குள் sentimental ஆக உதிக்கிறான். சூரியனின் அழகு, உக்ரம், உலக உயிர்களுக்கு அவன் வழங்கும் கொடை எல்லாம் என்னைப் பெரிதும் கவர்ந்திருக்கிறது. நான் முதலில் பார்த்த சூரியன் தாமிரபரணி நதிக்கு நேரெதிரே உதித்தான். பிறகு எல்லா ஊர்களிலும் எல்லா நிலைகளிலும் இவனை எனக்குத் தெரியும். நதிக்கரையில் சிறு பிராயத்தில் பார்த்த சூரியனை யாரும் சுலபத்தில் அலட்சியம் செய்துவிட்டுப் போகமுடியாது. – நகுலன்

செவ்விலக்கியங்கள் ஒரு சமூகத்தின் போதமனம் என்றால பழங்குடி மரபே ஆழ்மனம். ஆன்மீகம், கலைகள், இலக்கியம் ஆகியவற்றின் அடிப்படைத்தளமாக அமைவது அது தான். பொன்னார்மேனியனின் உடலில் புலித்தோலாகவும் உடுக்கையாகவும் அதுதான் உள்ளது. ஆழிவண்ணனின் மார்பில் கௌஸ்துபம் அதுவே. நமது நாட்டியத்தில், இசையில் அதன் கூறுகளே உள்ளன. தாண்டவம் இன்றி பரதநாட்டியம் முழுமையடைய முடியாது. நமது சிற்பவெற்றிகளில் பெரும்பகுதி ரௌத்ர பாவத்தின் வெளிபபாடுகள். அந்த பழங்குடித் தன்மை நம் ஒவ்வொரு எண்ணத்திலும் நம்மை அறியாமலேயே ஊடாடியுள்ளது. நம் மனதை திருவண்ணாமலை கோவில் போல உருவகிக்கலாம். ஓங்கிய கோபுரங்கள், விரிந்தகன்ற பிரகாரங்கள், தடாகங்கள் பலவிதமான மண்டபங்கள், பலநூறு சிற்பங்கள், முடிவற்ற அலங்காரங்கள் என தாண்டிச்சென்று நாம் காணும் இருண்ட ஆழமான கருவறை சற்றும் பண்படாத கரங்களால் கட்டப்பட்டது. உள்ளே கோயில்கொண்ட லிங்கம் வடிவமற்ற ஒரு கல்மட்டுமே. அறிய முடியா பழங்காலத்தில் ஏதோ ஆதிபிதாமகன் தன் பிரபஞ்ச தரிசனத்தின் சாரத்தை வெளிப்படுத்த ஒருகல்மீது மறுகல்லைத் தூக்கிவைத்து உருவாக்கிய அடையாளம். – ஜெயமோகன்

கலையை உடல்வாகுடனும், வயதுடனும் சம்பந்தப்படுத்தக் கூடாதுதான். இருந்தாலும், வயதாகி உடல் பருத்தவர்கள் நடனமாடினால் அதைக் கலை என்று ரசிப்பது சிரமமாகவே இருக்கிறது. நடனக்கலை தெரிந்த யார் வேண்டுமானாலும் நடனமாடலாம் என்றால், கோயில் சிற்பங்களில் எல்லாச் சிற்பங்களும் ஏன் இளம் பெண்களுடையதாகவே இருக்கின்றன? ஏன் அந்தப் பெண்கள் குறுகிய இடையுடையவர்களாகவே இருக்கிறார்கள்? – அசோகமித்திரன்

புகைப்படக் கலை என்பது வாள்சண்டை போன்றது. வாளை எவ்வளவு தூரத்தில் வைத்துக்கொள்ள வேண்டும் என்பதை முடிவு செய்ய வேண்டும். பொறுமையும் நிதானமுமாகப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். சரியான தருணத்தில் வாளை சுழற்ற வேண்டும். இதுதான் புகைப்படக் கலைக்கும் அடிப்படை. முதலில் எந்தக் கோணத்தில் எவ்வளவு இடைவெளியில் படமாக்க வேண்டும் என்பதை முடிவு செய்ய வேண்டும். பிறகு சரியான தருணத்திற்காகக் காத்திருக்க வேண்டும். மூன்றாவது, அந்தத் தருணத்தை நழுவ விடாமல் பதிவு செய்ய வேண்டும். வேட்டையாடுவதற்குக் காத்திருக்கும் விலங்கு எவ்வளவு கவனமாக காத்திருக்குமோ அந்த அளவு தீவிரமான வேட்கை உள்ளவரே நல்ல புகைப்படக் கலைஞராகிறார்.

– ஹென்றி கார்த்தியே பிரஸன்

வலைப்பதிவுக்கு என்று தனி இலக்கணம் இருக்கிறது. மின்னூடகத்திற்கென தனி விதிகள் உண்டு, மசியால் எழுதுவதும் அதே முறையை இங்கே பெயர்த்துக் கொண்டு வருவது முறையல்ல என்பதை அறிவது நல்லது. பழைய உதாரணங்களைக் கொண்டு சொல்ல வேண்டுமென்றால் இது மேடைக் கச்சேரியல்ல, எசப்பாட்டு. இணையம் தரும் வசதிகளால் உலகின் ஒவ்வொரு மூலைகளிலும் ஒலிக்கும் பிரம்மாண்டமான எசப்பாட்டு. இதற்கான எதிர்குரல்கள் எல்லா முடுக்குகளிலிருந்தும் எழும்பும். அதற்குத் தயாரான மனநிலை அவசியம். எனக்குப் பிடித்தமான பக்கவாத்தியங்களுடன் மேடைக் கச்சேரி செய்யத்தான் எனக்குத் தெரியும், அதைத்தான் நான் செய்வேன் என்று சொல்வது தனிப்பட்ட தெரிவு. ஆனால், களை பறிப்பவனுக்கு வேறு வேலையிருக்கிறது, அவனால் இங்கே மூன்று மணிநேர தோடி ஆலாபனையைக் கேட்கமுடியாது, கால் கடுத்துப் போனால் அவன் விரைவில் நகர்ந்துவிடுவான். – வெங்கட்

# காரை. தோப்புக்காட்டில் வீடமைப்புத் திட்டம்; இலங்கை செஞ்சிலுவைச்சங்கம் நிதியுதவி

(காரைநகர்)

காரைநகரில் மீள்குடியேறியுள்ள குடும்பங்களிற்காக தோப்புக்காடு என்ற பகுதியில் விசேட வீடமைப்புத் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இலங்கை செஞ்சிலுவைச்சங்கத்தின் நிதிப்பங்களிப்புடன் காரைநகர்ப்பகுதியில் ஒவ்வொன்றும் 3 இலட்சத்து 75ஆயிரம் ரூபா பெறுமதியான 70 வீடுகள் கட்டிக கொடுக்கப்படவுள்ளதாக ஈ.பி.டி.பி.யின் காரைநகர் பிரதேச அமைப்பாளரும் பிரதேசசபையின் எதிர்க்கட்சித்தலைவருமான கண்ணன் (ரஜனி) தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், காரைநகரின் தோப்புக்காடு ஜே/44, சயம்பு வீதி ஜே/47ஆகிய கிராம அலுவலர் பிரிவைச்சேர்ந்த மக்களுக்கே முன்னுரிமை அடிப்படையில் இவ்வாறு வீடுகளுக்கான நிதி வழங்கப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் பாரம் பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்பிற்கமையவும் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியின் ஒத்துழைப்புடனும் மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இதற்கான முன்னேற்பாடுகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# இருநாட்டு தேசிய கீதங்களுடன் இந்திய குடியரசு தினம் அனுஷ்டிப்பு



(யாழ்ப்பாணம்)

இந்தியாவின் 62அவது குடியரசு தினம் யாழ். நகரில் மிகவும் கோலாகலமாக அனுஷ்டிக்கப்பட்டது. இந்தியாவின் 62ஆவது குடியரசு தினத்தையொட்டி கடந்த வியாழக்கிழமை காலை யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் இந்தியக் குடிமக்களின் பங்கேற்புடன் கொடியேற்றல் நிகழ்வு நடைபெற்றது.

தொடர்ந்து மாலையில் யாழ். ரில்கோ உல்லாச விடுதியின் விருந்தினர் மண்டபத்தில் குடியரசு தினத்தையொட்டிய விசேட நிகழ்வு பல முக்கிய பிரமுகர்களின் பங்கேற்புடன் சிறப்பாக நடைபெற்றது.

மாலை 6.45 மணிஅளவில் ஆரம்பமான இந்த நிகழ்வில், வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

இலங்கை மற்றும் இந்திய தேசிய கீதங்கள் இசைக்கப்பட்டதைத் தொடர்ந்து, இந்தியத் துணைத் தூதரக பிரதம அதிகாரி வி.மகாலிங்கம் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

யாழ்ப்பாணத்தில் இந்தியத் துணைத் தூதரகத்தை அமைத்து 14 மாதங்கள் ஆகும் நிலையில், கூடியளவு விருந்தினர்களின் பங்கேற்புடன் இரண்டாவது தடவையாக இந்தியக்குடியரசு தினத்தை கொண்டாடக் கிடைத்திருப்பதையிட்டு மகிழ்ச்சி வெளியிட்ட வி.மகாலிங்கம், இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையிலான உறவு கடந்த ஆண்டு வளர்ச்சி கண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, இலங்கைக்கு, குறிப்பாக வட மாகாணத்துக்கு இந்திய அரசாங்கமும், மக்களும் தொடர்ச்சியாக அளித்துவரும் உதவிகளுக்கு தாம் நன்றி தெரிவிப்பதாகக் குறிப்பிட்டார்.

இரண்டு நாட்டு ஜனாதிபதிகளினதும் தேகாரோக்கியம் மற்றும் நலமான வாழ்வு வேண்டி இந்தியத் துணைத் தூதுவரும், ஆளுநரும் விசேட பானம் பரிமாறிக் கொண்டதைத் தொடர்ந்து, விருந்தினர்களுக்கான இரவு போசனம் நடைபெற்றது.

இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம் யாழ்ப்பாணம் வந்திருந்தபோது, யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வில் அவரிடம் கேள்வி கேட்டு, அவர் கூறிய பதிலை அப்படியே திரும்பவும் சொல்லி அவரை வியப்பிலாழ்த்திய வவுனியா இறம்பைக்குளம் மகா வித்தியாலய மாணவி பிரயாகினி கணேசலிங்கம், மற்றும் 13 வயது மாணவன் சிவகுமார் ராகுலன் ஆகியோருக்கு விசேட பரிசில்களும், இந்தியத் துணைத் தூதுவர் வி.மகாலிங்கத்தின் பணப் பரிசும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார், வடக்கு மாகாணச் செயலாளர் ர.விஜயலட்சுமி, யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்களுடன், கல்விமான்கள், வர்த்தகப் பிரமுகர்கள் என ஏராளமானவர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

செய்தி: சிகரம் செய்திப் பிரிவு

# வீதிகளுக்கு விமோசனம்; காரைநகருக்கு நிதி ஒதுக்கீடு

(காரைநகர்)

காரைநகர்ப்பகுதியில் நீண்ட காலம் திருத்தப்படாமல் இருந்த நான்கு வீதிகள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் உட்கட்டுமான அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இதன்படி கடந்த முப்பது வருடத்திற்கும் மேலாக திருத்தப்படாமல் இருந்த அல்வின் வீதி,தோப்புக்காடு பிரதான வீதி, கேத்தடைவிவசாயிகள் வீதி, வெண்ணன் திட்டி மணற்காடு அம்மன் கோவில் வீதி ஆகியவற்றை புனரமைத்துத்தருமாறு அப்பகுதி மக்கள் காரைநகர் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் அமைப்பாளர் வீ. கண்ணனிடம் விடுத்த வேண்டுகோளையடுத்து உடனடியாக இவ்விடயம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதன் பயனாக இவ்வீதிகள் திருத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுளளது.

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச்சங்கத்தின் 20ஆம்ஆண்டு வருடாந்த பொதுக் கூட்டம் இன்று பிற்பகல் 2 மணியளவில் சாவகச்சேரி அகிலாண்ட சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத்தலைவர் ம. விவேகானந தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், கூட்டுறவு அலுவலக உத்தியோகத்தர் செ. செல்வகுமாரன் பிரதம விருந்தினராகவும், சாவகச்சேரி மக்கள் வங்கி முகாமையாளர் க. சண்முகலிங்கம் சிறப்பு விருந்தினராகவும், சாவகச்சேரி ஜே/300 கிராம அலுவலர் சண்முகராசா செந்தூரன், இளைப்பாறிய கிராம அலுவலர் வை.இராசரத்தினம் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.



கட்டுநாயக்காவில் அமைக்கப்பட்ட தேசிய சேமிப்பு வங்கிக்கான புதிய கட்டடத்தின் திறப்பு விழா நேற்று முன்தினம் நடைபெற்றபோது பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டபோது...

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 16 08 1981



மறைவு 29 01 2011

## இரத்தினசிங்கம் சதீஸ் (தோழர் சதீஸ்)

ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் வடமராட்சி கிழக்கு அமைப்பாளர்

**தோழர் சதீஸ்!**

ஓராண்டு உருண்டோடியும்
உள்ளத்தில் இன்னும் நீ
அகன்றதாகவே இல்லை...

வாழ்கிறாய்...
எப்போதும் போல்
இப்போதும் எங்கள்
உள்ளங்களில் வாழ்கிறாய்...

மரணம் ஓர் முற்றுப்புள்ளி
அல்ல என்பதற்கு
நீ ஓர் உதாரணம்...

எல்லோரையும்
வியக்க வைத்த உன் சுறுசுறுப்பு
இப்போதும் எங்கள்
கண்களின் முன்பாக
உன்னை
அடையாளப்படுத்திக்கொண்டுதான்
இருக்கிறது...

மக்களுக்காக உழைக்கும்
தலைவர் வழிவந்து
மக்களுக்காக உழைத்தாய்
மரணம் உன்பின் வந்ததை
திரும்பிப் பார்க்கவில்லை நீ!

அதனால்தான் நாமின்று
திரும்பிப் பார்க்கின்றோம்
உன்னை...

தோழனே...
இறப்புக்கே
இறப்பு வரும் வரை
உன்நாமம் உச்சரிக்கப்படும்!
நிச்சயம்!

**ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி (ஈ.பி.டி.பி.)**

# எரிபொருள் இறக்குமதி ஓமான் – இலங்கை பேச்சு



(கொழும்பு)
ஈரான் மீது அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்தேய நாடுகள் பிரயோகித்துவரும் அழுத்தங்கள் அதிகரித்து வரும் நிலையில், ஓமானிடமிருந்து எண்ணெயை இறக்குமதி செய்வது தொடர்பில் அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது

இது தொடர்பில் பெற்றோலியத்துறை அமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவும், ஓமானின் பெற்றோலியத்துறை அமைச்சர் Mohammad bin Hamad al-Rumhy யும் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளனர்.

அமெரிக்க உள்ளிட்ட மேற்கத்தேய நாடுகள் ஈரான் மீதான பொருளாதாரத் தடையைக் கடுமையாக்கினால், இலங்கையினால் அந்நாட்டில் இருந்து எண்ணெயை இறக்குமதி செய்ய முடியாது போகும் அபாயமுள்ளது.

இலங்கை எண்ணெய் இறக்குமதியில் ஈரானை பெரிதும் நம்பியிருப்பதனால், இத்தகையதொரு தடைவிதிக்கப்படுமானால் ஓமானிடம் இருந்து எண்ணெயை இறக்குமதி செய்வது தொடர்பில் அரசாங்கம் அந்நாட்டுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளது

இந்நிலையில், இத்தகையதொரு நெருக்கடி நிலை ஏற்படுமானால் இலங்கைக்குத் தேவையான எண்ணெயை வழங்குவதற்கு ஓமான் இணக்கம் தெரிவித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் தினமும் சுத்திகரிக்கப்படும் மசகு எண்ணெய்க்கு ஈரானின் மசகு எண்ணெயையே இலங்கை நம்பியிருக்கின்றது.

ஈரானின் அதிகளவு சல்பர் செறிந்த கனமான மசகு எண்ணெயை சுத்திகரிக்கும் வகையிலேயே சப்புகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையம் உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பொலிஸாரின் நடமாடும் சேவையில் பெருமளவு மக்கள் பயன்பெற்றனர்

(கிளிநொச்சி)
கிளிநொச்சி மாவட்ட பொலிஸாரின் ஏற்பாட்டில் 5 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய மக்களுக்கான நடமாடும் சேவை நேற்றையதினம் சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

நேற்றுக்காலை 8.00 மணி முதல் 4.00 மணிவரை இடம்பெற்ற இந்த நடமாடும் சேவையில் தேசிய அடையாள அட்டை விண்ணப்பம் ஏற்றல், முதியவர் அடையாள அட்டை வழங்கல், பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுகள் என்பன மேற்கொள்ளப்பட்டன.

அத்துடன் டெங்கு தொடர்பாக சுகாதாரப் பரிசோதகர்களால் விழிப்புணர்வு செயற்திட்டமொன்றும் நடத்தப்பட்டது. வீதிப் போக்குவரத்து தொடர்பான ஒழுங்கு விதிகள் குறித்து பொலிஸாரால் மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட மருத்துவர்கள், ஆயுர்வேத மருத்துவர்களால் மக்களுக்கு சிகிச்சையும் அளிக்கப்பட்டது. இந்த நடமாடும் சேவையில் கனகாம்பிகைக் குளம், அம்பாள்நகர், இரத்தினபுரம், திருவையாறு, மலையாளபுரம், பாரதிபுரம் மற்றும் பொன்னகர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பெருமளவான மக்கள் பயன்பெற்றனர்.

இந்த நிகழ்விற்கு கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் சாலிய சில்வா பிரதம விருந்தினராகவும், பிரதிப் பொலிஸ் அத்தியட்சகர் செல்வக் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டதுடன், இந்நிகழ்விற்கான ஒழுங்குபடுத்தலை கிளிநொச்சி மாவட்ட பொதுமக்கள் தொடர்பாடல் பொறுப்பதிகாரி அரிஸ்டீன் மேற்கொண்டிருந்தார்.

# தமிழ்மக்களின் அழுத்தங்களை குறைப்பதற்கு நடவடிக்கை



(கொழும்பு)
வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அழுத்தங்களை குறைக்கும் நோக்கில், விரிவான அரசியல் அமைப்பொன்றை விரைவில் ஸ்தாபிக்க உள்ளதாக ஜே.வி.பி.யின் கிளர்ச்சி குழுவான மக்கள் போராட்ட அமைப்பு தெரிவித்துள்ளது.

யுத்தம் முடிவடைந்து இரண்டரை வருடங்கள் கழிந்துள்ள போதிலும், வடக்கு கிழக்கில் இருந்து இராணுவம் விலகிக் கொள்ளப்படவில்லை என சுட்டிக்காட்டியுள்ள அந்த அமைப்பு வடக்கு, கிழக்கில் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்த இந்த மாகாணங்களில் இருக்கும் இராணுவ முகாம்கள் குறைக்கப்பட்டு, சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளது.


அரசாங்கம் உடனடியாக இந்த நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை என்றால், தமிழ் மக்களுக்கு சம உரிமைகளை பெற்றுக் கொடுப்பதற்காக தமது அமைப்பு விரைவில் அரசியல் அமைப்பொன்றை ஆரம்பிக்கும் என மக்கள் போராட்ட அமைப்பின் செயற்பாட்டாளரான மேல் மாகாண சபை உறுப்பினர் வருண ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

## புதிய நெறியாளர் சபை

(யாழ்ப்பாணம்)
வடமராட்சி பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பின்வருவோர் புதிய நெறியாளர் சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவராக நா.கணேசன், உபதலைவராக கி.தவராசா, செயலாளராக த.சிவலிங்கம், நிர்வாக சபை உறுப்பினர்களாக கி.பூபாலசிங்கம், வ.முத்துராசா, அ.சின்னராசா, பெ.பொன்னாண்டோ, செ.கந்தராசா, சி.சிவகுமார் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

# சம்பந்தனும் ஜெனிவாவிற்கு?



(கொழும்பு)
அடுத்தமாத இறுதியில் ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் பங்கேற்கவுள்ளதாக கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கில ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அந்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

இந்தக் கூட்டத் தொடரில் இலங்கையிலிருந்து மேலும் பல அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் பங்கேற்கவுள்ளதாகவும் பல்வேறு நாடுகளின் தலைவர்கள், அமைச்சர்கள் மற்றும் தூதுவர்கள் இந்தக் கூட்டத்தொடரில் பங்கேற்கவுள்ளனர்.

# இனப்பிரச்சினையைத் தீர்க்க அரசாங்கத்திற்கு நாட்டமில்லை



(கொழும்பு)
தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் அரசாங்கத்திற்கு நாட்டம் கிடையாது என ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

முக்கிய பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கம் மெத்தனப் போக்கைப் பின்பற்றி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தின் இருப்பை தக்க வைத்துக் கொள்வதற்காகவே அரசாங்கம் இனப்பிரச்சினையைப் பயன்படுத்திக் கொள்கின்றது.

சர்வதேச சமூகத்தையும், சிறுபான்மை மக்களையும் ஏமாற்றும் வகையில் அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, சம்பள உயர்வு, கல்வி, சுகாதாரத்துறைப் பிரச்சினைகள் போன்றவற்றுக்கு தீர்வு வழங்கப்படவில்லை.

யுத்த வெற்றியைக் காட்டியே ஆட்சி நடத்தி வந்த அரசாங்கம் தற்போது இனப்பிரச்சினைக்கு தீர்வு வழங்குவது குறித்து பிரசாரம் செய்து ஆட்சியை தக்க வைத்துக்கொள்ள முயற்சிக்கின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

## முன்னாள் புலிகளும்....

இணைந்துகொள்ளலாம் என புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சந்தன ராஜகுரு தெரிவித்துள்ளார்.

பொலிஸ் திணைக்களம், அவர்களுக்கான வாய்ப்பை திறந்துள்ளது. இது சமூகத்தில் இணைந்த மேற்படி அங்கத்தவர்களுக்கும் பொலிஸ் திணைக்களத்துக்கும் இடையிலான விடயம். நாம் புனர்வாழ்வளிக்கும் துறையினர் என்ற வகையில் நாம் இதில் சம்பந்தப்படவில்லை என அவர்கூறினார்.

சுமார் 1000 முன்னாள் போராளிகள் தற்போது பல்வேறு நிலையங்களில் புனர்வாழ்வளிக்கப்படுகின்றனர் என்றார்.

## அரசாங்கத்துடனான...

சுரேஷ் பிரேமசந்திரன் தெரிவிக்கையில்,

சர்வதேச அனுசரணை சாத்தியமானால் அதை தமது கட்சி வரவேற்கும் என்றார். இத்தகைய பாத்திரத்தை வகிப்பது ஐ.நா. வாகவோ, பொதுநலவாய சம்மேளனமாகவோ சார்க் அமைப்பாகவோ அல்லது ஐரோப்பிய ஒன்றியமாகவோ இருக்கலாம் என அவர் கூறினார்.

இதில் விருப்பத்திற்குரிய தெரிவு எதுவும் இல்லை. எனினும் அரசாங்கம் தயாரானால் வெளிநாட்டு அனுசரணையாளர் இருப்பதை நாம் விரும்புகிறோம் எனக் கூறினார். எனினும் இத்தகைய தலையீட்டுக்கான உத்தியோகபூர்வ கோரிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதுவரை விடுக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

## சவேந்திர சில்வாவின்...

அமைதி காக்கும் படையின் ஆசிய பசுபிக் குழுவில் அங்கம் வகிக்கும் நாடுகளே மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவை அப்பதவிக்கு நியமித்ததாக மார்ட்டின் நெர்ஸ்க்கி கூறியுள்ளார்.

நியூயோர்க்கில் இடம்பெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின் போதே ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனின் பேச்சாளர் மார்ட்டின் நெர்ஸ்க்கி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் பிரதி நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவை ஐ.நாவின் அமைதி காக்கும் படையின் ஆலோசனைக் குழுவுக்கு நியமித்தது செயலாளர் நாயகம் பான் கீ மூன் அல்ல.

ஐ.நா. அமைதி காக்கும் படையின் ஆசிய பசுபிக் குழுவில் அங்கம் வகிக்கும் நாடுகளே அவரை அப்பதவிக்கு நியமனம் செய்தன என மார்ட்டின் நெர்ஸ்க்கி மேலும் தெரிவித்துள்ளார்.

## கூட்டமைப்...

நடந்த கலந்துரையாடல்கள் நிறைவடைந்துள்ளன. இதன்போது விவாதிக்கப்பட்ட விடயங்கள் குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

இருதரப்பிற்கும் இடையில் சிறந்த வகையிலான ஒத்துழைப்புடன் எதிர்காலத்தில் கலந்துரையாடல்களை முன்னெடுத்துச் செல்வதற்குரிய விடயங்கள் குறித்து ஆராய்ந்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## காணாமற்....

இதுபற்றிய தகவல்கள் தெரிந்திருந்தால் தங்களுடன் 416,808,3100 என்ற இலக்கத்திலோ அல்லது யார் தகவல் தருவது என்று தெரியாமல் தகவல் தர விரும்பினால் 4162228477 [416-222-TIPS] என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். அல்லது Crime Stoppers முகப்பதிவுப் பக்கத்திலோ அல்லது www.222tips.com என்ற இணையத்திலோ தகவல் தரலாம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## அழுத்தங்களை...

குறித்து, ஜெனிவாவிற்கான இலங்கைத் தூதுவர் தமரா குணநாயகம் அரசாங்கத்திற்கு தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட குழு உறுப்பினர் ஒருவர், உறுப்பு நாடு ஒன்றுக்கு எதிராக செயற்படும் முதல் சந்தர்ப்பம் இதுவென இலங்கை அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

## நயினை...

இப்புதிய கோபுர வாசலின் ஊடாக கோயிலுக்குள் அழைத்துச் செல்லும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (85)

## இலங்கையில்....

கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டனர்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டுள்ள போதும் அதனை நடைமுறைப்படுத்த இலங்கை அரசாங்கம் முன்வரவேண்டும் என்று இதன்போது வலியுறுத்தப்பட்டது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வைக்காண நல்லிணக்கம் ஏற்படுத்தப்படுவது அவசியமானதாகும். இந்நிலையில் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை இறுதிப்போரில் இடம்பெற்ற குற்றச் செயல்கள் குறித்த தகவல் எதனையும் வெளியிடாமையால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அந்த அறிக்கையை முழுமையாக நிராகரித்துள்ளது.

எனவே இலங்கை அரசாங்கம் குறித்த விடயங்கள் தொடர்பிலும் தமது கவனத்தை திருப்பவேண்டும் என்று ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கருத்துரைத்தனர்.

இதன்போது கருத்துரைத்த ஐரோப்பிய ஒன்றியத்துக்கான இலங்கைத் தூதுவர் ரவீந்திரநாத் ஆரியசிங்க, நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை நடைமுறைப்படுத்த அவகாசம் தேவைப்படுவதாக குறிப்பிட்டார்.

# எல்லைமீறிய அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்கக்கூடாது

## அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு



(கொழும்பு)

மாகாண சபைகளுக்கு எந்தவகையிலும் எல்லை மீறிய அதிகாரங்கள் வழங்குவதை அனுமதிக்க முடியாது என அமைச்சரும், ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இந்தியாவும் அமெரிக்காவும் அழுத்தங்களைக் கொடுக்கின்றது என்பதற்காக 13 ஆவது திருத்தச் சட்டமூலத்திற்கு அப்பால் சென்று தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வுத் திட்டத்தை முன்வைக்க முடியாது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் ஏனைய கட்சிகள் மற்றும் அமைப்புக்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்ள வேண்டுமே தவிர, அரசாங்கமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தன்னிச்சையாக செயற்பட முடியாது.

மாகாண சபைகளுக்கு மேலதிகமான அதிகாரங்களை வழங்குவது என்பது மிகவும் ஆழமாக சிந்திக்கப்பட வேண்டிய விடயமாகும். பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை அரசியல் தீர்வாக வழங்குவதற்கு ஜாதிக ஹெல உறுமய கொள்கை ரீதியாகவே எதிர்ப்புத் தெரிவிக்கின்றது. 13 ஆவது திருத்தச் சட்டமூலத்தை முழு அளவில் நடைமுறைப்படுத்தும் போது அது நாட்டிற்கு ஆபத்தானதாகவே அமையும்.

எனவே 13 ஆவது திருத்தச் சட்டமூலம் புதிய திருத்தங்களுக்கு உட்படுத்தப்பட வேண்டும். உதாரணமாக 1988 ஆம் ஆண்டு சூழலுக்கான விசேட சட்டமூலம் கொண்டு வரப்பட்டாலும், அதனை 1991 ஆம் ஆண்டே நடைமுறைப்படுத்த முடிந்தது. சூழலுக்கு எல்லை நிர்ணயம் செய்ய முடியாது. இந்தியாவில் சூழல் பாதிக்கப்பட்டால் அது இலங்கையையும் தாக்கும் என்பதே உண்மை. அரசியல் தீர்வு விடயத்தில் ஏனைய நாடுகளின் விருப்பத்திற்கு ஏற்ப செயல்பட முடியாது. ஜே.ஆர். - ராஜீவ் ஒப்பந்தம், சந்திரிகா - பிரபாகரன் ஒப்பந்தம், ஜி.எல். - பாலசிங்கம் ஒப்பந்தம் போன்றவைகளால் நாட்டிற்கு தேவையற்ற பிரச்சினைகளே வந்தது. இந்நிலையை மீண்டும் ஏற்படுத்திக்கொள்ளக் கூடாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மாசார் கிராமத்திற்கு மின் விநியோகம் ஆரம்பம்

நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரின் தொடர் முயற்சியின் பயனாக பச்சிளைப்பள்ளி மாசார் கிராமத்திற்கு நேற்று மின் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் ஆழியை இயக்கி இப்பகுதிக்காண மின் விநியோகத்தினை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார். இதன் மூலம் வரலாற்றில் முதன் முறையாக இக்கிராமம் மின் சக்தியை பெற்றுள்ளது.

இந்நிகழ்வில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் உறுப்பினர் தியாகராஜா, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் முகுந்தன், இலங்கை மின்சார சபையின் யாழ். பிராந்திய பொறியியலாளர் ஞானகணேசன், மாசார் பாடசாலையின் அதிபர் திருமதி கணேசலிங்கம், கிராமசேவையாளர் வல்லிபுரம், சாவகச்சேரி மின்னிலைய பொறியியலாளர் அன்ரன் ஞானப்பிர காஸ், ஆகியோரும் கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளும் பொது மக்களும் கலந்து கொண்டனர்.

# புலி சந்தேக நபர்கள் தங்கியிருந்த 'செல்'களிலிருந்து 2 தொலைபேசி மீட்பு

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலையில் விடுதலைப் புலி சந்தேக நபர்கள் தங்கியிருந்த 'செல்'லுக்குள்ளிலிருந்து இரண்டு 3ஜி ரக கைத்தொலைபேசிகள் மீட்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

வெலிக்கடை சிறைச்சாலையில் ஏற்பட்ட அனர்த்தத்தை அடுத்து விடுதலைப் புலிச் சந்தேக நபர்கள் 180 பேர் களுத்துறை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டனர். இவ்வாறு மாற்றம் செய்யப்பட்ட பின்னர் அவர்கள் இருந்த 'செல்'களில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது மேற்படி இரண்டு கைத்தொலைபேசிகளும் மீட்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இடமாற்றம் செய்யப்பட்ட வேளை, இந்த இரண்டு தொலைபேசிகளையும் தம்முடன் எடுத்துச் செல்ல அல்லது அவற்றை மறைத்து வைக்க அவர்கள் மறந்திருக்கலாமெனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தத் தொலைபேசிகளைப் பயன்படுத்தி வெளிநாடுகளிலிலுள்ளவர்களுடன் இவர்கள் உரையாடி இருக்கலாமெனப் பொலிஸார் சந்தேகம் தெரிவிக்கின்றனர். மீட்கப்பட்ட தொலைபேசிகளிலிருந்து கைப்பற்றப்பட்ட இரண்டு 'சிம்'களும் மேலதிக விசாரணைகளுக்காக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# பனங்கட்டி உற்பத்திச்சாலை அமைத்து தரக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

மிதமிஞ்சிய கள்ளில் இருந்து பனங்கட்டி தயாரிப்பதற்கு ஏற்ற தொழிற்சாலை அமைத்து தருமாறு கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், பனை அபிவிருத்திச் சங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

நேற்றுக்காலை இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இக்கோரிக்கை விடப்பட்டுள்ளது. இந்தவேளையில் தமது கோரிக்கை குறித்துக் கையளித்த அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது,

சங்கத்தில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அங்கத்தவர்கள் இணைந்து கொண்டபோதும் பருவ காலங்களில் 350 - 400 அங்கத்தவர்கள் கள் உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களின் கள் உற்பத்திக்கு ஏற்ப விற்பனை இடம்பெறுவதில்லை. மிதமான கள்ளை வடிசாலைக்கு அனுப்பியும் வீணே நிலத்தில் ஊற்றவேண்டிய நிலையும் காணப்படுகின்றது. இக்கள்ளை வீணாக்காது மாற்று உற்பத்தியில் ஈடுபட்டால், சங்கத்தையும், அங்கத்துவ குடும்பங்களின் வாழ்வாதாரத்தையும் மேம்படுத்த முடியும்.

கடந்த காலங்களில் எமது சங்கத்திற்கென 8 வெல்ல உற்பத்தி நிலையங்கள் இருந்துள்ளன. இவை அனைத்தும் யுத்த அனர்த்தத்தில் முற்றாக அழிந்தும், சில சிதைவடைந்துள்ளதுடன், அதன் பொறித்தொகுதிகளும் அழிவடைந்துள்ளன.

இந்தநிலையில், சகல வசதிகளுடனும் ஒரு வெல்லத் தொழிற்சாலையை அமைத்துத் தருமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

## பல்கலை அனுமதி இன்று முதல் விண்ணப்பம்

(கொழும்பு)

பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பப் படிவங்களை இன்று முதல் தெரிவு செய்யப்பட்ட முகவர் நிலையங்களிலிருந்து பெற்றுக் கொள்ளலாமென பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

விண்ணப்பங்களை அனுப்பும் இறுதித் திகதி பெப்ரவரி 21 எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் இந்த விண்ணப்பங்களை, பூபாலசிங்கம் மற்றும் அன்னை புத்தகசாலைகளில் பெற்றுக் கொள்ளலாம்.

# உபவேந்தரின் நியமனத்தை இரத்துச் செய்ய இணக்கம்

(கொழும்பு)

கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களின் எதிர்ப்பை அடுத்து அப் பல்கலைக்கழகத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்ட உபவேந்தர் பேராசிரியர் நிமால் ரஞ்சித் அத்தநாயக்கவின் நியமனத்தை இரத்துச் செய்வதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு தற்போது நியமிக்கப்பட்டுள்ள பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த உபவேந்தரின் நியமனத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து பல்கலைக்கழக மாணவர்கள் விரிவுரைகளைப் பகிஷ்கரித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.


அத்துடன், கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு உடனடியாக நிரந்தரமான வேறொரு தமிழ் உபவேந்தரை நியமிக்குமாறும் பல்கலைக்கழக மாணவர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனையடுத்து, உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கவுடன் தமிழ் அரசியல்வாதிகள் மேற்கொண்ட பேச்சுவார்த்தையின் பலனாக தமிழர் ஒருவரை உபவேந்தராக நியமிப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டம் நியாயமானது என பிரதியமைச்சர் முரளிதரன் பி.பி.ஸி.யிடம் தெரிவித்துள்ளார்.

# மரண அறிவித்தல்கள்

## வட்டன் செல்லையா



மட்டுவில் கிழக்கைச் சேர்ந்த வட்டன் செல்லையா 28.01.2012 சனிக்கிழமை அன்று காலமாகிவிட்டார். இவர் வட்டன் சின்னப்பிள்ளை தம்பதிகளின் ஏக புத்திரனும், செல்லாச்சி, சரஸ்வதி ஆகியோரின் அன்புக் கணவரும், வள்ளிப்பிள்ளை, அமரர்ஆச்சிமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரனும், கலைச்செல்வன் (லண்டன்), மழலைச்செல்வன் (சுவிஸ்), அமரர் கலைஇளவரசன், கலைமோகன் (லண்டன்), காலைவாணி (சுவிஸ்), கலைவர்ணன் (வர்ணன், பந்தல் சேவை) ஆகியோரின் அன்புத் தன்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

**மட்டுவில் கிழக்கு**

**தகவல் :**
**வர்ணன் (மகன்)**

தொ.பே.இல: 0771381405

(C/148)

## நாகமணி பரராஜசிங்கம்

சரவணையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகமணி பரராஜசிங்கம் 27.01.2012 வெள்ளிக்கிழமை அன்று சிவபதம் அடைந்தார். அன்னார் நாகமணி பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் செல்வநாயகம் லட்சுமியின் அன்பு மருமகனும், அற்புத ராணியின் அன்புக் கணவரும், கிருபாகரன், காலஞ்சென்ற வசீகரன் மற்றும் வனஜா, நிலாகரன், துவாகரன், வானுமதி ஆகியோரின் பாசமிகு தந்தையும் அமரர் யதகுலசிங்கம் மற்றும் மதியாபரணம், அமரர்களான கருணானந்தசிவம், தமிழ்செல்வம் மற்றும் பராசக்தி, சறோஜினிதேவி, வசந்தாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கனகம்மாவின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2012) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அன்னாரது இலத்தில் நடைபெற்று நாரந்தனை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**சரவணை**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

(C/147)

# மரண அறிவித்தல்

## திருமதி சிவகுரு நாகம்மா

சந்நிதி வீதி, தம்பாலை அச்சுவேலியைச் சேர்ந்த சிவகுரு நாகம்மா கடந்த 27.01.2012 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2012) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக அச்சுவேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**புதிய ரூபன் வர்த்தக நிலையம்,**
**சந்நிதி வீதி,**
**தம்பாலை,**
**அச்சுவேலி.**

**தகவல் :**
**இராமச்சந்திரன் குடும்பம்.**

(C/146)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 ஜனவரி 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.